தமிழ்ப் பொழில்.

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௩௧	திருவள்ளுவர் யாண்டு ௲௯௮௫—௮௬ மன்மத, ஐப்பசி, கார்த்திகை 1955 அக்டோபர், நவம்பர்	மலர் ௭—௮

வீண் முயற்சி.

"உயர்நிலைப் பள்ளிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் வடமொழியைக் கட்டாய பாடமாக ஏற்படுத்த வேண்டும்", என்று அண்மையில் திருப்பதியில் கூடிய நான்காவது சமஸ்கிருத விச்வ பரிஷத் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த மாநாட்டில் கலந்துகொண்டவர்களில் பலர் அனைத்திந்திய அரசியலரங்கில் முதன்மை இடம் பெற்றிருப்பவர். இவர்களெல்லாம் கலந்துகொண்டு இதுபோன்ற நடைமுறைக்கொவ்வாத முடிபுகளை நிறைவேற்றியிருப்பதும், பேசியிருப்பதும் நமக்கு வியப்பைத் தருகின்றது.

இம்மாநாட்டில் கலந்துகொண்டு பேசியவர்கள் பேச்சுக்கள், முடிபுகள் ஆயவற்றைச் சிந்தித்தால், வடமொழிக்கு நாட்டில் ஆக்கம் தேடுவதை விடுத்து, வடமொழியை முன்னிறுத்திப் பல வம்புகளை உண்டாக்க முயலுகின்றார்களென்றே எண்ணவேண்டியிருக்கிறது. வடமொழி எக்காலத்திலும் ஒரு நாட்டு மக்களின் பேச்சு வழக்கில் இருந்ததில்லை. உலகில் இன்ன நாட்டு மக்கள், இன்ன காலத்தில் பேசி வந்தனர் என்று எவராலும் வரையறுத்துக் கூறமுடியாது. அதாவது அது ஒரு தேசீய மொழியல்ல. பன்னெடுங் காலமாக அது ஓர் பயிலும் மொழியாக உலகில் வழங்கி வந்துள்ளது. இந்த உண்மையை ஓராத பெருமக்கள் எந்த நாட்டுக்காரரோ பேசிக்கொண்டிருக்கின்ற மொழி போலவும், அதனைச் செத்த மொழியெனக் கூறுவது சரியல்ல என்பது போலவும் பேச முன் வந்திருப்பது விந்தையாகவுள்ளது. இந்தியப்

பெருநிலப் பரப்பு முழுவதிலும் வடமொழிக்கு முன்னர் இன்றுள்ள திராவிட மொழிகளின் மூல மொழியே வழங்கியதெனவும், பேச்சு வழக்கிலில்லாத பயிலும் மொழியாக மட்டும் இருந்த வட மொழி அம்மூல மொழியொடு கலந்து அவைகளின் பண்டைய உருவத்தைச் சிதைத்துப் பற்பல மொழிகளாக விளங்குமாறு செய்தது என்பதும் உண்மையாகும். இதற்கு இன்றுள்ள மலையாளமும், தெலுங்கும் கண்கூடான சான்றுகளாகும். கருத்து வேறுபாடுகட்கிடமான இது கிடக்க!

இன்றுள்ள நிலைமையில் இந்திய நாட்டின் பல பகுதிகளிலும் வழங்கிவரும் வட்டார மொழிகள், மக்கள் வாழ்க்கைக்கு வேண்டிய தேவைகளை நிறைவு செய்யும் வகையில் பல துறைகளில் நன்கு வளர்ந்துள்ளன. சில துறைகளை இனித்தான் நிறைவு செய்ய வேண்டும். இந்நிலையில் அரசியலார் செய்யவேண்டியதென்ன? கோடிக் கணக்கான மக்களின் வாயில் அழகுறத் தவழ்ந்தும், தொடக்க, உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மொழியாகத் தளர் நடையிட்டும், பல்கலைக் கழகப் பாட மொழியாக ஏறுபோல நிமிர்ந்து நடக்கமுயலும் வட்டார மொழிகளை வளர்க்க வேண்டுவதே யாகும். இதனை விடுத்துப் பொதுமக்களால் என்றுமே பேசப்படாததும், பயிலும் மொழியாக மட்டும் இருந்து வந்ததும், தன்பாலுள்ள கலைச் செல்வங்கள் பலவற்றை வட்டார மொழிகட்கீந்து வறுமையுற்றதும், பலகோடி மக்கள் வாழும் இப்பரந்த உலகில் வெளிப்படையாக வாழாமல், உலகப் பல்கலைக் கழகங்களின் ஓரிரு அறைகளில் ஒரு சில மாணவரிடத்தும், ஆசிரியரிடத்தும், இந்திய நாட்டில் தாமே உயர்ந்தவரெனத் தருக்கி உடலுழைப்பை வெறுத்துச் சோம்பேறிகளாகத் திரியும் சிலரிடத்தும், கோவிலிலும், மடங்களிலும் வட்டார மொழிகளோடு வம்பு செய்துகொண்டும் இருப்பதா, ஒழிவதா என்ற நிலையில் ஒதுங்கிப் பிழைத்து உயிரொடு ஊசலாடுவதும் ஆய வட மொழியைக் கட்டாயப்படுத்தி வம்பு செய்வது அரசியலார் கடமை யாகுமா? என்பதை அறிஞர் சிந்திப்பார்களாக.

இந்திய நாட்டின் வட்டார மொழிகளுள் பலவற்றிற்குப் பெருமளவில் வளமீந்தும், சிலவற்றிற்கு ஓரளவு வளமீந்தும் பயன் பட்டது என்ற அளவில் வடமொழிக்கு வாழ்த்துக்கூறுவதான் நாம் அதற்குச் செய்யும் கைம்மாறுகும். இல்லாவிட்டால், இன்னும் வட்டார மொழியில் மொழிபெயர்க்கப்பட்டோ அல்லது தழுவியோ எழுதப்படாத, (அதாவது வடமொழியில் மட்டும் உள்ள) சில

கலைகள் இருக்குமானால் அவைகளை மொழி பெயர்த்தோ, தழுவியோ வரைய முயல்வதும், பரப்ப முயல்வதும் சமஸ்கிருத விச்வபரிஷத்தார் அல்லது இவர்கள் கூறுவதுபோல அரசியலார் செய்யவேண்டிய நற்பணிகளாகும்.

இதனை விடுத்து, சமஸ்கிருத விச்வபரிஷத்தார் என்றுமே வாயற்ற வடமொழிக்கு வாயுண்டாக்க முயல்வதும் வாதிடுவதும் வீண் முயற்சியாகும். பொதுமக்கள் பேசுவதற்கு என்றுமே தகுதியில்லாது பேச்சு வழக்கற்று ஏட்டளவில் விளங்கும் இம்மொழியைச் சிலர் தாராளமாகப் பேசினார்களாம். ஆகவே இது பேச்சு மொழியாகுமெனப் பலர் மகிழ்ந்தார்களாம். இச் செய்தியைப் படித்தவுடன் நாடக மேடையில் நடிப்பதற்காக உலவும் ஒட்டு மீசை, தாடி வைத்தவர்களும், பற்களை உடையார் போலப் பொய்ப் பற்களைக் கட்டிக்கொண்டு உலவும் தந்தப் பல்லர்களும் எமக்கு நினைவுக்கு வந்தனர். நாடகக்காரர்கள் இரவில், நாடக அரங்கில் மீசையுடையார்போல, தாடியுடையார்போல உலவலாம். மீசையும் முறுக்கலாம். தாடியையும் உருவலாம். ஆனால் பொழுது விடிந்தால் எல்லாம் பொய்யாகிவிடும். பற்களுடையார் போலத் திரியும் பொய்ப் பல்லுடையார் முன்னிலையில், நம் நாட்டு வீடுகளில் இத்திங்களின் சிறந்த தின்பண்டமான முறுக்கையும் சீடையையும் வைத்தால் பொய்ம்மை விளங்கிவிடும். அதுபோல மணிக் கணக்காகப் பேசிய வடமொழி வம்பர்கள் வீட்டில் சென்று பேசினால் வீட்டிலுள்ள பெண்கள் "நீங்கள் என்ன வம்பு செய்கின்றீர்கள்? படித்ததையெல்லாம் அடுத்த ஆண்டு ஐந்தாவது சமஸ்கிருத விச்வபரிஷத் நடக்கும்; அதுபோது சென்று காட்டுங்கள் இங்கு வேண்டாம். தெலுங்கில் பேசுங்கள் என்பார்கள். தமிழராயிருந்தால் தமிழில் பேசுங்கள் என்பார்கள். நிற்க.

மொழிவழி நாடுகளாக விளங்கும் இந்திய நாட்டுள் சமஸ்கிருதத்தின் மேன்மையையும், பரப்பும் முயற்சியையும் பிற நாடுகள் மேற்கொள்ளலாம். ஆனால் தமிழ் நாடு இதனை மேற்கொள்ள முடியாது. தமிழ்ப் புலவர்களும், தமிழ் நூல்களும் வட மொழியில் காணப்படாத தமிழிற்கே உரிய தனித்த இயல்புகளைப் பன்னெடுங் காலமாகப்பேணிப் பாதுகாத்து வந்துள்ளன. வட மொழியில் உள்ள சிறந்த நூல்களாகக் கருதப்படுவனவற்றைத் தமிழர்கள் நன்கு பயின்று தமிழ் நாட்டுக்கேற்றாற்போல காவியமாகவும், உரை நடை நூலாகவும், செய்யுள் நூலாகவும் வரைந்துள்ளனர். இவைகளெல்லாம் தமிழ் நாட்டுப் பண்பாடுகட்கேற்ப நல்ல முறையில்

அமைத்து தமிழ் மக்களின் ஒருமித்த போற்றுதலேயும், பயிற்சியையும் பெற்றுள்ளன. வான்மீகம் வட மொழியில் உள்ளதென்ருல், தென் மொழியாம் தீந்தமிழில் கம்ப ராமாயணம் உள்ளது. தமிழ் நாட்டுப் பழக்க வழக்கங்களே வான்மீகி கண்ட கதையுள் புகுத்தி அழகுறப் பாடியுள்ளதைக் காணலாம். கம்ப ராமாயணம் படிப்பது தமிழருக்கு எளிமையாகவும், பயனுள்ளதாகவும் இருக்குமே தவிர, வான்மீகத்தைப் படியெனக் கட்டாயப்படுத்துவது பொருந்தாது. வியாசர் பாரதத்தை வட மொழியில் பயிலுவதைவிட வில்லிப்புத்தூரார் பாரதத்தைத் தமிழில் பயில்வது தமிழருக்கு ஆக்கமளிக்கும். இவை போல இன்னும் பல வரைய முடியும்.

இனி, ஒத்த பிறப்பினராய மக்களுள் பிறவியில் உயர்வும் தாழ்வும், குலத்துக்கொரு நீதியும் கூறும் மனுமுதலிய அற நூல்களே விடத் தமிழருக்கு, ஏன்? உலகினருக்கே "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற அடிப்படையில், "தூய உள்ளம் பெரியவுள்ளம் தொல்லுலக மக்களெல்லாம் ஒன்றே என்னும் தாயுள்ளம்" கொண்டு அறம் பாடிய வள்ளுவனுரின் பொய்யா மொழி நல்வழி காட்டும். ஆகவே இத்தகைய வீண்முயற்சியில் சென்னே மண்டில அரசியலார் முயலாதிருப்பார்களென எண்ணுகிருேம்.

போற்றுதல் ஏன்?

ஆயிரம் ஆயிரம் மக்களிங்கு — தமிழ்
அன்னேத் துயரினேப் போக்குதற்கு
மேய வழிபல தேடுகின்ருர் — இதன்
மேன்மையைக் காட்டவும் நாடுகின்ருர்.

தாயெனப் போற்றி வளர்த்திடுவோம்—எனச்
சாற்றி முழக்கிப் பறையறைவார்
சேயெனக் கொஞ்சி உளஞ்சிறப்பார்—உயிர்ச்
சிந்தை கனிய செவிமடுப்பார்.

இங்கிதன் காரணம் என்னேயென்ருல்—எழில்
ஏற்றம் எளிமை இலக்கியத்தின்
பாங்குடன் பற்பகலே நூல்களுண்டே—அந்தப்
பான்மையி ஞல்இயல் மேன்மையினுல்.

ச. பா.

(வரும்.)

சென்ற இத[illegible] தொடர்ச்சி.

கர[illegible]ந்தைக் கோவை.

[வித்துவான் ச. பாலசுந்தரம்.]

பெட்ட வாயில்பெற் றிரவு வலியுறுத்தல்

69 ஓங்குதொல் காப்பிய நூற்றுணை யாக ஒளிர்கரந்தைத்
தேங்குமி லக்கியச் சீரறிந் தின்பம் திளைப்பதுபோல்
மாங்குயி லாய்மனம் வாழ்பவள் தன்னை மணக்கவுயிர்ப்
பாங்கியல் லாற்றுணை யாருளர் சென்று பணிகுவமே.

ஊர் வினுதல்

70 வெல்லுந் தமிழ்தெரி வார்கரந் தைப்புனம் மேவியபின்
செல்லும் வழிதெரி யாதுளந் தேங்கித் திகைக்குமெனக்(கு)
ஒல்லும் வகையில்நும் ஊர்ப்பெயரும்மாங் குறுநெறியும்
சொல்லும் படிக்குமை வேண்டினன் சொல்லுக தோகையரே.

பெயர் வினுதல்

71 செய்யாத செந்தமிழ்ச் சீர்த்தியை நாளும் திசைபரப்பப்
பொய்யாத தொண்டுசெய் தோங்குங் கரந்தைப் புனத்துலவும்
எய்யாத அம்பிரண் டாலுயிர் வாட்டும் எழிலணங்கீர்
மெய்யாக நும்பெய ராயினும் சற்றே விளம்புகவே.

கெடுதி வினுதல்

72 சாரும் புலவர்தந் தாயக மர்ங்கரந் தைத்தலத்தில்
ஊரும் பெயருமிங் கேயுரைத் தாற்குறை யுற்றிடுமேல்
காரும் கனவரை போலுங் களிறொரு கையம் பிறைற்
சோருங் குருதி யுடன்வந்த தோவிருஞ் சோலையிலே.

---

69 சங்க இலக்கியப் பொருள்களைத் தொல்காப்பியங்கொண்டு தெளிவது போல் இவ்வுயிர்ப்பாங்கியைக்கொண்டு தலைவியை அடையலாம் என்றான்.

70 உறுநெறி—செல்லும் வழி.

71 இயற்கை மொழியாதலின் செய்யாத எனப்பட்டது. எய்யாத அம்பு—கண்கள். மெய்யாக — உடம்பைப் பொருந்த என்ற பொருளும் காண்க.

இதுவுமது [மான் வினுதல்]

(ஆ) உண்ணினே வார்க்கமிழ் தாந்தமிழ் பூக்கும் உய கரந்தைப்
பண்ணனே வாய்மொழிப் பங்கய மாமுகப் பாவையன்னீர்!
கண்ணனே வண்டுசீ காமரம் பாடுமிக் காவினிடைப்
புண்ணணந் தோர்கலேப் போந்ததுண் டென்னிற் புகலுமினே

இதுவுமது [பன்றி வினுதல்]

(இ) முள்ளுறு மேனமென் றெண்ணும் படிக்கென்றன் மொய்
கணேதோய்ந்(து)
உள்ளுறு வள்ளுவன் ஒண்டமிழ் ஓங்கி ஒளிர்கரந்தைக்
கள்ளுறு நன்மலர்க் காவகத் தேவரக் கண்டனிரோ?
தெள்ளுறு செந்தமிழ் ஆர்திருவீருரை செய்ம்மின்களே.

ஒழிந்தது வினுதல்

73 இயலுங் கனிநறும் பால்தேன் சுவைகுறைந் தெய்க்குமென்ருே
குயிலுங் கிளியுமென் பூவையு மீண்டுங் குறுகுமென்ருே
முயலுந் தொறுஞ்சுவை எட்டுந் தருந்தமிழ் மொய்ம்புடனே
பயிலுங் கரந்தையன் னீர்பக ராததென் பான்மொழியே.

இதுவுமது

(ஆ) அழியாத செந்தமி ழன்னே யமைந்தரு ளாட்சிசெய
ஒழியாத நல்லிசை ஓங்குங் கரந்தையில் ஒண்டொடியீர்
பிழியாத தேறலும் பெய்யாத கொண்டலும் பிறர்வினவ
மொழியாத மாந்தரும் தோன்றுதல் என்றும் முறையிலவே.

யாரே இவர்மனத்தெண்ணம் யாதெனத் தேர்தல்

74 சீரார் கரந்தையிற் செந்தமிழ்க் கல்லார்தஞ் செய்யுளென
ஊரே தெதுவழிப் பேரே தெனப்புகன் ருேர்மதமா
நேரே புகுந்தது வோமொழி கென்றே நிலேதளரும்
ஆரே இவர்மனத் தெண்ணமும் யாதென் றறிந்திலனே.

---

72 மேகம்போன்றும் மலேபோன்றும் என்க-உருவும்மெய்யும் உவமை. பண்ணனே - இசையொத்த. கள் + நணே—தேன் புரிந்துண்ணும் வண்டு சீகாமரம்— ஒருவகைப் பண்—கலே—மதியும் ஆம். முள்ளுறுமேனம்—முள்ளம் பன்றி.

73 ஒழிந்தது—மொழி. எய்த்தல்—இளேத்தல்—குறுகுதல்—இனமா மென்று குறுகுதல் — என்பால், மொழி — ஏன்!பால் பொன் மொழி. என்க.

எண்ணந் தெளிதல்

75 இணையின்றி வண்டமிழ் ஓங்குங் கரந்தையில் என்னிடத்தே
திணையின்றி ஐம்பாற் சொலும்பகுப் பார்மொழிச் செம்மைஎனக்
கணையின்றி வில்லின்றி வேட்டைக் கருத்தின்றிக் கானகத்தே
துணையின்றி வந்தவர் நோக்கமித் தோகையின் தோள்
விருப்பே.

(இருவரும் உள்வழியவன் வரவுணர்தல்)
தலைவன் கையுறை ஏந்தி வருதல்

76 நாவுங் கருத்தும் ஒருங்கினிக் கின்றசெந் நாப்புலவர்
பாவும் பரிமே லழகர்சொல் லும்மெனப் பாங்கியுடன்
காவுங் கடிபுனல் யாறுங் கவின்செய் கரந்தையயல்
மேவும் அவரிடைச் சென்றுரைப் போம்நம் மெலிவினையே.

தலைவன் அவ்வகை வினுதல்

77 எளிதாய் இருங்கலை யாவும் இயம்பும் எழில்தமிழைக்
களியாப் பருகுவர் வாழ்கரந் தைப்பொழில் காணணங்கீர்!
ஒளியா துரைத்திடல் வேண்டும் ஒருகளி றேரம்பினுல்
விளியா திளைப்புடன் வந்ததுண் டோவிவ் வியன்புனத்தே.

இதுவுமது (மனம் வினுதல்)

தாங்குந் தமிழவே ளின்புகழ் போல்வளர் சங்கமுற
ஓங்குங் கரந்தையில் முத்தமிழ்ச் சோலையில் ஒன்றிமகிழ்
தூங்கும் எனதுளம் சொல்லலும் இன்றித் துணிவுடனே
நீங்கிம் மலர்ப்புனம் நேர்ந்ததுண் டோநீர் நிகழ்த்துகவே.

பாங்கி எதிர்மொழி கொடுத்தல்.

78 தேனும் கரும்பும் சிறுரின் மழலையும் சேர்ந்தசுவை
ஈனும் தமிழ்ப்பயிர் பேணும் கரந்தை இரும்புனத்தில்
மானுங் களிறுமோர் வாளியின் நொந்து வரும்புதுமை
நானும் இவளுமெந் நாளினும் கண்டிலம் நம்புகவே.

---

75 உயர்திணை, அஃறிணைப் பிரிப்பின்றி பால் ஐந்து பகுக்கும் பிற மொழிகள் சொல் நோக்கிப் பால் வேறுபடுதல் காண்க.

76 செந்நாப் புலவர்—திருவள்ளுவர். சொல்—ஈண்டு உரையைக் கருதிற்று.

77 களியா—களித்துச் சுவைப்பர். காணணங்கு—கட்புலனுந் தெய்வம். விளிதல்—மடிதல். நீங்கி இம்மலர்ப்புனம் - விகாரம்.

இறைவனை நகுதல்.

79 சேரும் புகழ்கரந் தைத்திகழ் சோலையிற் செந்தமிழ்த்தேன்
வாரும் மலரம்பி னாலெய்யும் மக்களை மாரனென்பார்
ஆரும் அதுகண்ட தில்லையிம் மாந்தளிர் அம்பதனால்
ஓரும் களிறெறிந் தாரிவர் என்வியப் பொண்டொடியே.

இதுவுமது

அருங்கவி யாப்பறி யாதவர் வெண்பா அடிஎடுத்துப்
பொருந்தவி ருத்தம தாய்ப்பின் புரையாய்ப் புகைவதுபோல்
கரந்தையி லிம்மற வோர்தளிர் அட்ட களிறுபின்னர்
வரும்பிணை யாய்வன்றி யாய்மன மாகி மறைந்ததுவே.

பாங்கி மதியின் அவரவர் மனக் கருத்துணர்தல்.

80 பாட்டும் உரையும் பயில்கரந் தைப்புனப் பைங்கிளியை
ஓட்டும் கருத்திலள் ஒண்டொடி வேந்தனின் உட்கருத்தும்
வேட்டம் குறித்ததன் றாமவர் தம்முள வேட்கையெலாம்
நாட்டம் விளங்கநன் றாயுரை செய்யுமிந் நாளகத்தே.

10. பாங்கியிற் கூட்டம்.

தலைவன் உட்கோள் சாற்றல்.

81 அணிமேவு நற்கவி யாக்குங் கரந்தை அரும்புனத்தில்
மணிமே கலைச்சிலம் பாயவை கொண்டு மகிழ்சிறப்பீர்!
அணிமா மதிப்பிறை ஆழ்கடல் நல்லமிழ் தாயினும்நும்
பணிமேவ நான்கொணர் வேனெளி தாமருட் பார்க்குதுமே.

பாங்கி குலமுறை கிளத்தல்.

82 திருவாய் மொழித்திரு வாசகத் தேனைத் தினமருந்தி
வருவார் புகழ்க்கரந் தைத்தல மன்னாள் வனமுகத்தாள்
செருவார் விலங்குகொல் வேடர்தம் பாவைச் சிறுகுடியாள்
கருவார் திருவுடைக் காவலன் நீயிவை காணலையே.

---

79 ஓரும்—அசை. தளிர் அட்ட—தளிர் அம்பினாற்கொன்ற.

80 நாட்டம் அவர்கள் வேட்கையை நன்றாக உரை செய்யும் என்று கூட்டுக.

81 பணிமேவ—கட்டளையிட. அருள்—ஆணை.

82 வன முகத்தாள் — அழகிய முகத்தாள், வனத்தில் வாழ்பவளும் ஆம். செருவார்—போர்த்தன்மை கொண்ட வேடர் என்க. சிறுகுடி—ஊர்ப் பெயர்—ஏழை என்றுமாம். கருவார்திரு—கருவிலேயே அமைந்த திரு. காணலை—காண்க, காணாதது ஏன் என்றுமாம்.

தலைவன் தலைவியை உயர்த்தல்.

83 எல்லா உயிரும் பிறப்பொத்தல் வள்ளுவன் பேருரையைக்
கல்லார் அறியார் கரந்தையிற் செந்தமிழ் கற்றவன்யான்
நல்லா ரிடத்துள்ளம் நண்ணல் இயற்கையிந் நானிலத்தில்
இல்லா உரைபகர்ந் தாயெழில் மாதர் எனக்குயிரே.

பாங்கி அறியாள்போன்று வினுதல்.

84 கழங்கா டிடத்துமிக் காவினும் வாவிக் கரையிடத்தும்
வழங்கா வருபவர் தாம்பலர் கன்னியர் வண்டமிழ்ச்சீர்
முழங்கா வருகரந் தைத்தலத் துன்னுளம் மூண்டொழுகும்
பழங்கா தலியெவர் பார்த்தெனக் கேயுரை பாவலனே.

இறையோன் இறைவி தன்மையியம்பல்.

85 எனையாளும் நற்றமிழ் சீர்சால் கரந்தை இயற்றமிழும்
வனையாத சிற்பமும் வார்த்தெடுக் காததோர் வண்சிலையும்
புனையாத ஓவமும் ஓர்வழி யொப்பினும் பொன்மலரை
மனையாக வாழுமிம் மங்கையொவ் வாப்பிற மாநிலத்தே.

இதுவுமது.

தண்டே னிகர்மொழி வாழுங் கரந்தைத் தமிழ்மகளே!
வண்டே விழிகுழல் விண்டே அனநடை வாய்மொழிகற்
கண்டே இடைசிறி துண்டே முகமதிக் காம்பிருதோள்
கொண்டே விளங்குவள் பண்டே எனதுளம் கூடினரே.

பாங்கி தலைவியருமை சாற்றல்

86 பண்கண்ட நற்றமிழ்ப் பாவுங் கரந்தைப் பனிவரைமேல்
எண்கொண்ட நற்குண மேந்தெழி லோர்வடி வேய்ந்துவரும்
கண்கண்ட தெய்வமிம் மாமலைக் காவலன் காரிகையாம்
பெண்கொண்ட காட்சியை அன்றே பெருந்தகை பேசுவதே?

---

84 வழங்கா-வழங்கி—விளையாடி. முழங்கா—முழங்கி.
85 ஓவம்—ஓவியம். விண்டு—மேகம். காம்பு—மூங்கில்.
86 பாவும்—பரவும்.

தலைவன் தலைவி இன்றியமையாமை இயம்பல்

87 அளியற்ற மாந்தர் அணியற்ற பாக்கள் அகல்விசும்பில்
துளியற்ற மேகம் துதியற்ற நெஞ்சம் துணையிலன்றில்
களியற்ற பூவிவை காணலுங்கூடும் கரந்தையைப்போல்
அளியுற்ற மங்கையல் லாலிலை ஆவியெற் காரணங்கே.

பாங்கி நின்குறை நீயே சென்றுரை என்றல்

88 வடியாத் தமிழ்ச்சுவை வார்க்குங் கரந்தை வனமயிலாம்
கொடியா ளெவர்க்கும் படியாளுன் காதலைக் கூறுகெனின்
அடியா ளவட்கியான் ஆதலின் கோள்சொல அஞ்சுகிறேன்
பிடியா ளெதற்கு?ப் பெருந்தகை! நீசென்று பேசுகவே.

பாங்கியைத் தலைவன் பழித்தல்.

89 மூவேந்த ரின்முறைக் கோட்டந் தவிர்த்த, முதற்பொருளை
நாவேந்தர் ஞானசம் பந்தரா ரூரர்பால் நண்ணவைத்த,
பாவேந்த ருக்கருள் பண்ணுங் கரந்தைநற் பைந்தமிழால்
ஏவேந்து கண்ணியை யானிரந் தேனது என்குறையே.

இதுவுமது.

மொழியே விழியொரு நாட்டினுக் கென்னும் முதுமொழியின்
வழியே பணிபுரி வார்கரந் தைதவள வஞ்சியுனைப்
பழியேன் மடவார் தமைநம்ப லென்று படித்திருந்தும்
ஒழியேன் பெருநசை யாலிரந் தேன்பணிந் தூழ்வினையே.

பாங்கி தலைவி பேதைமையூட்டல்.

90 தாயின் மடிதுயில் வாள்மரப் பாவையைத் தானெடுத்து
வாயிற் பழந்திணித் துண்ணுமை யாற்,பிணி வந்ததெனப்
பாயற் பணிபுரி வாள்,கரந் தைத்தமிழ்ப் பாவல!உன்
நோயின் தகவறி யாளவள் பாலென் நுவலுவதே?

---

87 களி—தேன்.
88 வடியா—வடித்து. பிடியாள்—கூலியாள்.
89 கோட்டந்தவிர்த்த கண்ணவைத்த தமிழ் என்க. ஏ. அம்பு.

(தொடரும்)

சென்ற இதழின் தொடர்ச்சி.

பண்பு.

சிவா.

அதேபோன்று நானும் அழகுப் பெருந்தெய்வம் அல்லியின் முகமன்றி வேறொன்றும் காணவில்லை. இந்தப் பத்தாண்டுகளில் எவ்வளவு பெரியவளாக வளர்ந்துவிட்டாள். சிற்றுடை கட்டிச் சிரிக்கச் சிரிக்கப் பேசின அவள், இப்போது சேலை கட்டு மளவிற்குப் பெரியவளாகிவிட்டாள். காலம் தன் கையிருப்பாகிய அழகெனும் சரக்கை அள்ளிக் கொட்டி அவளைத் தங்கப் பதுமையாக ஆக்கியிருந்தது. அனங்கன் தன் திறமை அனைத்தையும் வடித்தெடுத்த உயிர்ச் சிலையாக அவள் காட்சியளித்தாள்.

அப்பப்பா! ஆரவாரமான பட்டினத்துப் பெண்களுக்கும் இவளுக்கும் எத்தனை எத்தனை மாறுதல்? பல பெண்களுடன் நான் பழகியிருக்கிறேன். பட்டினத்துத் தெருக்களிலே ஆயிரமாயிரம் புது முகங்களைக் கண்டிருக்கிறேன். ஆனால் அவர்களிடமெல்லாம் இல்லாத கவர்ச்சி இவளிடம் அமைவானேன்? பட்டினத்துப் போலி நாகரிகத்தின் வயப்படாது. பார்த்ததுமே புலனாகும் பழந் தமிழ்ப் பண்பாடு ஒளிர்கின்ற அல்லியின் வாழ்வை, என் தமிழ் நெஞ்சம் மிகவும் விரும்பியது. இருவருக்குமுள்ள வேற்றுமையை என் மனம் எண்ண ஆரம்பித்தது. பட்டினத்துப் பெண்களில் பெரும்பாலோர், இரட்டைச் சடை பின்னியிருப்பர். செயற்கையாக நெளிந்துள்ள கூந்தலின் ஓரத்திலே மணமற்ற மலர்கள் செருகியிருப்பர். நிறைய முகத்தூளை அப்பி, நலிவுற்ற முகத்தைப் பொலிவுள்ளதுபோலக் காட்டுவர். வெண்மையான இதழ்களுக்கு உதட்டுச் சாயம் பூசி சிவப்பு தோன்ற செய்வர். உடலுக்கு மெருகேற்றிக் கண்டார் கண்களிலே ஒரு மயக்கத்தை உண்டாக்கும் வகையிலே உடையணிவர். அவர்களின் ஒவ்வொரு செயலிலும் செயற்கையின் நிழற்கோடுகள் தோன்றும். அவர்களைப் பற்றி என்றோ என் நண்பர்களிடையே நான் சொன்ன கவிதை ஒன்று நினைவிற்கு வந்தது.

வேற்கூர்மை கண்களிலே கருமை தீட்டி
வெண்மைத்தூள் முகத்தினிலே கனமாய் ஏற்றிக்

காற்றுடி விரைகாற்றில் பறத்தல் போல
கண்கவரும் நிறச்சேலை காற்றிலாட,
வேற்றுநாட்டு நாகரிகப் பொருள்க ளெல்லாம்
விலைபோட்டு வாங்கியதால் மேனி ஏற,
நாற்புறமும் விழிசுழல நகர்வாழ் நங்கை
நாணமின்றிப் பலர்பார்க்க வருவாள் போவாள்.

ஆனால் அல்லியிடம் இவைகளையெல்லாம் அறவே காணமுடியாது. இயற்கையிலே அலைபோல சுருண்டோடும் கூந்தல், மணமுள்ள சில மலர்கள் நிறைந்த ஒற்றைச்சடை, வட்டமான தெளிந்த முகம், குழந்தையுள்ளம், சிவந்து தோன்றும் சின்னஞ்சிறிய அழகான இதழ்கள், கவர்ச்சிமிகுந்த நீலக் கருவிழிகள், பற்கள் வெளியே தெரியாதபடி இதழ்க்கடையில் நெளிந்தோடும் புன்னகை, கட்டுடல், வளைய வளைய நடக்கும் நடை. இவையனைத்தும் தன்பால் கொண்டவள்தான் அல்லி. அமைதி, தூய்மை, பண்பு இவைகட்கு எடுத்துக்காட்டாக விளங்கும் இவள் எங்கே? போலி வாழ்வு பற்றி நிலைகுலையும் பிறர் எங்கே? ஆனால் இருவருக்கும் ஒற்றுமை இருக்கத் தான் செய்கிறது. அதாவது இருவரும் தமிழ் நாட்டில் பிறந்தவர்கள். தமிழ்ப் பெண்கள் ; ஆனால் மாறுபட்ட இருவேறு சூழ்நிலைகளிலே வாழ்பவர்கள். சூழ்நிலை ஒருவரை உயர்த்தவும் செய்கின்றது. வேறொருவரைத் தாழ்த்தவும் செய்கின்றது. அதை நாடுகின்றனர் சிலர். சிலரை நாடுகின்றது அது. சிலர் அறியாமையினால் அதனுள் சிக்குண்டுத் தவிக்கின்றனர். ஒருவருடைய சிறந்த பண்பும், அறிவுத் திறனும், அவர் வாழ்கின்ற வாழ்வாலும், சூழ்நிலை அவரைத் தேடிச்சென்று அவராணைகேட்டு ஒழுகும் நிலையாலும் வெளிப்படுகின்றன.

நமது நாட்டிற்கு ஒவ்வாத மேனாட்டுப் பழக்கங்கள் பலவற்றை அப்படியே பின்பற்றி நமது பண்பாட்டிலே கறையடித்துக் காட்டுகின்ற பற்பலரின் நினைவு எனக்கு வந்தது. பட்டினத்து எல்லையிலிருந்து ஒதுங்கி, அமைதியான சிற்றூர்ச் சூழ்நிலையிலே ஆரவாரமற்ற வாழ்வுவாழும் அல்லிக்கு என் மனம் ஓர் உயர்ந்த இடத்தை அளித்தது. அல்லி-அந்தச் சொல்லிற்குத்தான் எவ்வளவு ஆற்றல்; சிறு வயதிலேயே பெற்றோரை இழந்தேன். பட்டினத்திலிருந்த எனது மாமாவின் வீட்டிலே வளர்ந்தேன். வாழ்க்கைக்குத் தேவையான எல்லா வசதிகளும் எனக்கு இயற்கையிலே இருந்தன. ஏறக்குறைய பத்து ஆண்டுகட்குப் பின்னர்தான் எனக்கு எங்கள்

சிற்றூரின் நினைவு வந்தது. அதுவரை சொத்துப் பொறுப்பு முதலியவற்றை எனது மாமாவும், கணக்கரும் கட்டிக்காத்தனர். சிறு வயது நிகழ்ச்சிகள் சிலவற்றைத்தவிர மற்றையனவெல்லாம் நினைவுத் திரையிலிருந்து நீங்கின. ஆனால் அல்லி மாத்திரம் அதிலே அழியாத அழகோவியமாக நின்று மிளிர்ந்தாள். ஊருக்கு வரும்போதே அல்லியைப்பற்றிய எண்ணம் எனக்கிருந்தபோதிலும் அவளைக் காண்போம் என்ற நம்பிக்கை இல்லை. காலப்போக்கில் பருவம் வந்தபின் யாருக்காவது அவள் உரிமையாகியிருக்கலாம் என நினைத்தேன். வண்டியில் வரும்போதே எங்களூரைப்பற்றி என்னென்னவோ எண்ணங்கள் மின்னி மறைந்தன. விடிகின்ற நேரத்தில் ஊருக்குள் வண்டி நுழைந்தது. ஊருக்குக் கோடியில் தான் நான் படித்த பள்ளிக்கூடமிருந்தது. ஊர் நடுவே ஒரு கோவில். நான்கு பக்கங்களிலும் அழகிய தெருக்கள். இவையன்றி ஊர்ப் பொது மன்றம். சிறு மருத்துவ மனை. இவையெல்லாம் சிற்சில மாறுதல்களுடன் காணப்பட்டன. வாழ்வோடியைந்த புதுமைக் கோலங்களும் ஆங்காங்கே விரவியிருந்தன. நான் ஒருவர் கண்ணிலும் படாமல் வீட்டிற்குச் சென்றுவிட வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் முதன்முதலாக எங்களுக்கே பெரியவரான தாத்தா கந்தசாமியாரைக் கண்டேன். அவர் அறவாழ்வின் உருவாகும் பெற்றியர். எல்லாத் துறைகளையும் முற்றும் கற்றுத் தெளிந்த சான்றோர். இல்லறமேற்று, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, அவரது வாழ்க்கைத்துணை மறைந்ததும், அறவழிப் பற்றித் தனது பெருஞ்செல்வத்தைப் பொதுநலத் தொண்டிற்காக வாரி வழங்கிய வள்ளல். ஊராருக்கெல்லாம் எழுத்தறிவிக்கும் இறைவன். வள்ளுவன் வரைந்த தமிழ்த் துறவி. எங்களூரே அவர் வாய்மொழிகேட்டு அதன்படி நடக்கும். சுருங்கச் சொன்னால் சிற்றூராரின் உயிர் அவர். ஏனையோர் அதற்குள் உடல்.

தாத்தா என்னைக் கண்டதும் களிப்புக் கரைபுரண்டோட! சந்திரனா! வாப்பா. இன்று நீ வருவதாகக் கணக்கர் சொன்னார். வண்டியை எதிர்நோக்கித்தான் காத்திருந்தேன்" என்றார். அதற்குள் நான் வண்டியிலிருந்து இறங்கி அந்த நடமாடுந் தெய்வத்தை வணங்கினேன். அடிபணிந்த என்னைத் தூக்கி நிறுத்தி,

சந்திரா! பத்தாண்டுகள் பட்டினத்துச் சூழ்நிலையிலே வாழ்ந்துங்கூட உனது பழம் பண்பு இன்றும் மாறவில்லையே! 'பணியுமாம் என்றும் பெருமை! என்றார் தாத்தா.

தாத்தா! அறிவறியாத சிறுவயது முதற்கொண்டு அறிவுரை கூறி, என்னை நல்வழிப்படுத்தியவர் தாங்கள் தானே! அன்று வித்திட்ட தாங்கள் இன்று அதன் விளைவைக் காண்கின்றீர்கள். தங்களிடம் கற்ற பாடங்களை மறக்கும் அளவிற்கு, எனக்கு நினைவாற்றல் குறைந்துவிடவில்லை தாத்தா!" என்றேன் நான்.

"சந்திரா! வான் வெளியில் நான் கட்டியிருக்கும் ஆசைக் கனவுகளெல்லாம் உன்னால்தான் நனவாகப் போகின்றன. அதற்கேற்ற தமிழ்க் காளையாக நீ விளங்குவதைக் காண என்னுள்ளம் மிகவும் பூரிக்கின்றது."

'சொல்லுங்கள் தாத்தா! கணநேரத்தில் செய்து முடிக்கின்றேன்.'

"இளமை மிடுக்கு! எளிதாகச் சொல்லிவிட்டாய். எதிர்ப்பு நிறைய இருக்கும். அடடே! நான் என்போக்கிலே பேசிச் செல்கின்றேனே! வீடு சென்று பயண அலுப்புத் தீர ஓய்வெடுத்துக் கொள். பின்னர் வந்து காண்பேன்" என்றார் அந்தக் குணக் குன்று.

வீட்டிற்கு வந்தேன். பகல் வேளையில் பலர் வந்து கண்டு சென்றனர். அல்லியைப் பற்றி என்னுள்ளம் அறியத் துடித்தது. இருந்தாலும் ஆவலை அடக்கிக் கொண்டேன். மாலையில் உலவித் திரும்பும்போது அவள் வீடு சென்று செய்தி அறியலாமென நினைத்திருந்தேன். ஆனால் எதிர்பாராத நிகழ்ச்சி என்னை அவள் வீட்டிற்கு அழைத்துச் சென்றது. நான் பெண்களைப் பற்றி நண்பர்களிடையே பேசுவேனே தவிர, எதிரே அவர்களைக் கண்டால் கொஞ்சம் அடக்கமாகச் செல்வேன். அவர்களைப் பார்ப்பதற்குக் கூட எனக்குக் கொஞ்சம் நாணமாக இருக்கும். அதற்குக் காரணம் நம்மைப் பார்த்தாவது அவர்கள் திருந்தக் கூடாதா என்ற எண்ணந்தான். பட்டினத்துத் தெருக்களிலே நாள்தோறும் வெறித்த பார்வைகளால் அடிப்பட்டதால்தானோ என்னவோ, நான் இடையே பெண்கள் சென்றால் அந்தப் பக்கம் பார்ப்பதே இல்லை.

இவ்வாறு சொல்வதைக் கேட்டுச் சிலர் நான் பெண்களுக்கு உரிமை தராதவன் என்றெண்ணலாம். அவ்வாறு எவராவது நினைத்தால் அந்த நினைப்புத் தவறாகும். ஏனென்றால் உலகம் எல்லாவற்றிற்கும் ஓரெல்லை வகுத்துள்ளது. அந்த எல்லைக்குள்

நின்று அவரவர்க்குரிய கடமையை ஆற்றின் உரிமை தானுகவே வந்தடையும். கடமையைச் செய்தும் உரிமை கிடைக்காதுபோயின் அந்த உரிமையைக் கடமை ஆற்றியவர் வலுவிலே கவர்ந்துகொள்ளினும் தவறில்லை என்று கருதுபவன் நான். மறைந்துபோன தமிழர்தம் பொற்காலம் மீண்டும் வராதா எனக் கனவு காணுபவன். அருந்தமிழ்ப் பாடிய ஔவை, மறக்குடி மகள் காவற்பெண்டு, புறப்பொருள் பாடிய காக்கை பாடினி, கற்புக் கனல் கண்ணகி போன்ற பற்பல பெண்குல விண்மீன்களை நம் கண்முன்னர் பெருமளவிலே காணுதற்கு ஏங்கும் நெஞ்சம் என்னுடையது. ஆடவராயினும் மகளிராயினும் பண்புடையவராய் வாழ்தல் வேண்டுமென்பதுதான் என் கொள்கை. பண்பு! - எங்கிருக்கின்றது? புதுமை என்ற போர்வைக்குள் ஒளிந்திருப்பவை எல்லாம் பண்பல்ல. பழமை என்ற பகுதிக்குள் மறைந்திருப்பவை அனைத்தும் பண்பற்றவை. என்று ஒதுக்கிவிட முடியாது. தமிழ் மறை கூறும் அறவாழ்விற்குட்பட்ட உறுதிப் பொருள்களனைத்தும் தமிழ்ப் பண்புடையவையே. அந்தப் பண்பு நலம் சிறக்கப் பெற்றுரை என்னுள்ளம் தானே வாழ்த்துகின்றது - வணங்குகின்றது. அந்தப் பண்பால்தான் அல்லியும் என்னுள்ளம் கவர்ந்தாள்.

மாலை கண்ட இருவரில் ஒருத்தி ஒருவேளை அல்லியாக இருப்பாளோ என்று முதலில் நான் ஐயுற்றது பின்னுல் உண்மையாய் விட்டது. அவள் காலிலே கைக்குட்டையைக் கட்டும்போது என் மனம் வேறென்றைப் பற்றி எண்ணியது. இந்தக் காற் கட்டு, ஊராரெல்லாம் அறியும்படியாகக் கழுத்தில் கட்டும் மங்கல நாணுக மாறினுல் எப்படி இருக்கும் என்று கற்பனை உலகிலே மிதந்தது இரவு முழுவதும் என் மனம் இனந் தெரியாத இன்ப உலகில் வாழ்ந்தது. அல்லியும் என்னையும் பற்றிய இளமை நிகழ்ச்சிகள் பற்பல கண்முன் ஓடின. பட்டினம் - பட்டிக்காடு. இந்த இரண்டிற்கு மிடையே உள்ள பெரும் பிளவை என்மனம் நினைத்தது.

பொய்மையான நாகரிகத்தைக் கைக்கொண்டு தங்கள் தூய்மை இழப்போர், நல்லவர்போல நடித்துப் பொல்லாங்கு புரிவார். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர், போலி வாழ்வு நடத்தும் ஆடம்பரச் சந்தையிலே அங்கம் வகிப்போர், இவர்கள் தான் பட்டினத்து மூலை முடுக்குகளெல்லாம் ஏராளமாக குவிந்துள்ளனர். எல்லாத் துறையிலும் நடிப்புக் கைவரப்பெற்றவர்தான் அங்கு நன்ருக வாழ முடியும். எவ்வளவுதான் நல்லவராக இருந்

தாலும் நடிக்கத் தெரியவில்லை என்றால் நடுத்தெருவில் நிற்க வேண்டியதுதான். அந்த நிலைக்கு ஆளாக்கி விடுவர். ஒட்டி உற வாடும் உள்ளம் படைத்தோர் என்று சொல்லிக்கொள்வோர். அங்கு எதற்கெடுத்தாலும் போர்! போர்! பட்டினத்து மனிதன் தன் வாழ்வின் ஒவ்வொரு படியிலும் போராடுகின்றான். தேவை அவனைப் போராடத் தூண்டுகின்றது. இல்லாதவன் உள்ளவனோடு, ஏமாற்றுக்காரன் தன் ஏற்றத்திற்காக ஏமாந்த மற்றவர்களோடு உள்ளவன் தனது சேமிப்பின் எண்கள் கூட வேண்டுமென்று, வணிகன் தான் சுரண்டும் மக்களோடு, இப்படி ஒவ்வொருவரும் மற்றவரோடு போராடிப் போராடி முடிவில் ஓய்ந்து விடுகின்றனர். போராட்டத்தின் அடிப்படைப் பெரும்பாலும் சுய நலமாகத்தான் இருக்கிறது. ஒருவன் வாழ்வுப் போரிலே வெற்றிபெற்றால், மற்றவர் போற்றும் மதிப்புப் பெறுதலின் மகிழ்கின்றான். தோற்றுவிட்டால், சமுதாயத்தின் அடித்தளத்திலே அகப்பட்டுத் தானடைந்த தோல்வியை எண்ணியெண்ணி ஏங்கிச் சாகின்றான். தோல்வி கருதாது, முயற்சியையே முழுதும் நம்பி மேலும் போரிட எண்ணுகின்ற வனையும் அங்கு காண முடிகின்றது. அங்கு அறத்தினுடைய பொருளும் எல்லையும் கட்டுப்படுத்தப்படுகின்றன. மறவழிகட்கு அறப்பூச்சுப் பூசப்படுகின்றது. உள்ளத்தைக்கொன்று வாழ்கின்ற வர்கள்தான் நிறைந்துள்ளனர். அந்த வாழ்வில் பல ஆண்டுகள் நான் பெற்ற அநுபவங்களே என்னை அந்த ஆரவாரமான வாழ்வை வெறுத்தொதுக்கச்செய்தன. எண்ணற்ற விண்மீன்களிடையே முழு மதி ஒளிவிடுதல்போன்று, இதயமில்லார் பலர் நடுவிலும் மனச் சான்றிற்குப்பயந்து வாழ்கின்றவர்கள் மிக அருகிக் காணப்படுகின் றனர். ஆனால் அவர்கட்கு, ‘ உலகமறியாப் பைத்தியங்கள் ’ என்று மற்றவர் தாராளமாகப் பட்டத்தை மாத்திரம் சூட்டிவிடுகின்றனர்.

அமைதி, எளிமை, தூய்மை, அன்புபோன்ற பற்பல பண்பு கட்கும் உறைவிடமாக விளங்குவன சிற்றூர்கள். பட்டினத்தில் காணும் வாழ்வுப் போராட்டம் இங்கு இல்லை. வறுமையிற்செம்மை யாக வாழ்பவரைக் காணலாமே தவிர, பிறர் வாழ்வைப் பலியிட்டு அதன்மீது அரசநடை போடுவாரைக் காணமுடியாது. இப்படி என்னென்னவோ எண்ணங்களில் மிதந்த நான் எப்போது தூங்கினேன் என்று தெரியாது. காலை விழித்ததும் நேரமாகி இருப்பதை உணர்ந்தேன். விரைவாக எழுந்து வேலைகளை முடித்து அல்லியின் வீடு நோக்கி ஓடினேன். அங்கே ... ...

(வளரும்)

இசை நடையும் நாடக நடையும்.

இரா. இளந்திரையன், B. A. (Hons.)

ஒவ்வொரு மொழியின் இலக்கியங்களையும் ஆராய்ந்த அறிஞர், அவ்விலக்கியங்கள் உரைநடை அல்லது செய்யுள் நடையாலாகி இருப்பனவென்றே வரையறுத்துள்ளனர். இவ்விரண்டு நடைகளும் குறிப்பிடத்தக்க இரு பெரும் பிரிவுகளெனினும், மொழியில் வேறு சில நடைகளும் உள்ளன. அவற்றை இசை, நாடகம் ஆகிய பகுதிகளுள் அடக்கலாம். தமிழ் மொழி தோன்று தொட்டே 'முத்தமிழ்' என வழங்கி வருகின்றது. அம்முத்தமிழ் இயல், இசை, கூத்து என விரியும் என உள்ள வழக்கும் இற்றைக்குப் பழமையானதே. உரை நடையையும் செய்யுள் நடையையும் தன்னுள் அடக்கியுள்ள இயல் தமிழும், பாட்டு நடையினையுடைய இசைத் தமிழும் பெருகியிருக்க, கூத்துத் தமிழ் மட்டும் வளர்ச்சி குன்றி நின்றுள்ளமையைத் தமிழ் இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இடைக்காலத்தும் தற்காலத்தும் "கூத்து" என்பது நாட்டிய நாடகமே — அஃது ஓர் நடை உள்ளிட்ட தமிழ் இலக்கியமன்று' என்ற கொள்கை பலரிடைப் பரவி வந்துள்ளது. அவர் அவ்வாறு கருதியதற்குக் காரணமும் இல்லாமலில்லை. இயற்றமிழிலும் இசைத் தமிழிலுமான நூல்கள் மலிந்திருக்க, கூத்துத் தமிழ் நூல்கள் இல்லை. இதனைக்கொண்டே அவர்கள் மேற் குறிப்பிட்ட முடிவுக்கு வந்திருக்க வேண்டும் என்று கருத இடமுண்டு.

நமக்குக் கிடைக்கும் முதல் தமிழ்க் காப்பியம் அல்லது முதல் பொருள் தொடர் நிலைச் செய்யுளாகிய சிலப்பதிகாரம் 'முத்தமிழ்க் காப்பியம்' என வழங்கப்படுகின்றது. இந்நூலுக்கு உரைவகுத்த உரைப் பேராசிரியராகிய அடியார்க்குநல்லார், தமது உரைப்பாயிரத்தின் தொடக்கத்தில் இந்நூலை "இயலிசை நாடகப் பொருள் தொடர்நிலைச் செய்யுள்'' எனக் குறிப்பிடுகின்றார் எனவே இந்நூலில் உரைநடை, செய்யுள் நடை, பாட்டு நடை,

நாடக நடை ஆகிய பல நடைகள் கலந்துள்ளன என்பது தெளிவாகிறது. கூத்து என்பது ஒரு நடையாக இல்லாதிருந்து, பிறர் கூறுவதுபோல் ஒருவகை ஆட்டமாக மட்டுமிருக்குமாயின், பிற இலக்கிய நடைகளைக் குறிப்பிடுமிடத்தில் அதனைக் குறிப்பிடுவது பொருந்தாதன்றோ? ஆதலின் 'கூத்து' என்பது ஓர் இலக்கிய நடையையே குறிக்கின்றது என்பது விளங்குகிறது.

நாடக நடை எவ்வாறு துலக்கமின்றிக் கிடக்கிறதோ இவ்வாறே, பாட்டு நடையும் கிடக்கின்றது. இன்று வழங்கும் இசைக்கும் பழந்தமிழ் இசைக்கும் பல வேறுபாடுகள் உள. பழம் இசையின் பல பகுதிகள் இன்னவென்றே இன்னும் இசையறிஞர் ஆய்ந்து முடிவு காணவில்லை. சிலப்பதிகாரத்திலும், அதன் உரையிலும், வேறு சில இலக்கண இலக்கிய நூல்களுள்ளும், அங்கொன்று மிங்கொன்றுமாகக் காணக்கிடக்கும் குறிப்புக்களைத் தவிர, முழுமையான வரையறைகளை வகுத்துப் பாட்டு நடையினையும், நாடக நடையினையும் விளக்கும் நூல்கள் தமிழில் இப்போது இல்லை. அத்தகு நூல்கள் இருந்து அழிந்துள்ளன என்பதை உரையாசிரியர்களின் சில குறிப்புக்களிலிருந்து தெரிந்துகொள்ளுகிறோம்.

இலக்கிய வரலாற்றில், ஒரு குறிப்பிட்ட துறையினவாகிய நூல்கள் குறிப்பிட்ட காலத்தில் வளர்ச்சியடைவதும், பிற துறை நூல்கள் வளர்ச்சி குன்றிவிடுவதும் சிலபோது அழிந்துவிடுவதும் புதுவதன்றும். சங்க காலத்திற்குப் பின்னர் தோன்றிய சமயக் கொந்தளிப்புக்கள் இயல் தமிழை வளர்த்தும் இசை நாடகத் தமிழ்களைத் தூர்த்தும் வந்துள்ளமை ஆராய்ச்சியாளர் ஒப்பும் உண்மையாம். அதன் காரணமாகவே நாடகத் தமிழ் வளர்ச்சி குன்றி ஒதுங்கி நின்றுள்ளது. அதனோடு சிறை செய்யப்பட்ட இசைத் தமிழை ஆழ்வார்களும் நாயன்மார்களும் விடுதலை செய்தனர். நாடகத் தமிழோ பிற்காலச் சோழர் காலம்வரை சிறைப்பட்டே கிடந்தது. இக்காலத்து அது விடுவிக்கப்பட்டபோதிலும், நீண்டகாலச் சிறை வாழ்க்கை அதன் அடிப்படையையே சிதைத்துவிட்டதனாலோ என்னவோ மீண்டும் அது வளர இயலாது போயிற்று. இக்காலத்துத் தோன்றிய சில நாடகத் தமிழ் நூல்கள்கூட நமக்குக் கிடைக்கவில்லை.

ஒருவேளை, மிகுதியும் கதையுள்ளிட்டே வளரத் தொடங்கிய இயல் இசைத் தமிழ்கள் நாடக நடையையும் தம்மோடு இணைத்துக்கொண்டமையின் நாடக நடை தனியே வளரவில்லையோ என்றும் எண்ண இடமிருக்கின்றது நிற்க,

இனி, நாடக நடை, இசை நடை என்பன உளவாயின் அவற்றுக்கெனத் தனி இயல்புகள் இருக்கவேண்டுமல்லவா? இவ்வியல்புகளை விளக்கவும், இலக்கண இலக்கியங்களிடைக் காணும் சில குறிப்புக்களையே துணைக்கொள்ளவேண்டியுளது. தொல்காப்பிய (செய். 153) உரையில் இசை நடையின் இரு வேறு பகுதிகளைக் குறிப்பிடுகின்றார் பேராசிரியர். அவை உறுப்புக்கள் விரவி வருவதும் பல உறுப்புக்கள் விரவாது ஒருறுப்பால் வருவதுமாம். அவற்றுள் உறுப்புக்கள் விரவி வருவது எடுப்பு, தொடுப்பு, முடிப்பு என வரும் முறைபோலும். உறுப்புக்கள் விரவாது வருவது ஆழ்வார், நாயன்மார் பாட்டுக்களைப்போல், பிற செய்யுட்களின் இயல்பொடு வருவது என்று கொள்ளுமாறுளது. இவற்றுள் பல உறுப்பினவாய் வருவன. அவ்வவ்வுறுப்புக்களிலேயே ஒவ்வொரு பொருள் முடிபுபெற்று நிற்கும். ஒருறுப்பாக வருவது மிகுதியும் வெண்பாவின் இலக்கணம் பொருந்தி, ஒரு பொருள் நுதலி வருமியல்பினது. இதற்கு;

"வெண்பா வியலான் விரவுறுப் பின்றித்
தன்பா வகையொடு பொருந்திய பொருளே
ஒன்று விளைந்திற்ற இறுதித் தாகும்"

என்னும் அடிகள் காட்டப்பட்டுள்ளன. வரிப்பாட்டும், சிற்றிசையும், பேரிசையும் முதலாயின, இயற்றமிழ்ச் செய்யுளினின்று வேறுபடப் பாடப்பெறுவனவாதலின் அவை இசைப் பாவென வழங்கும் என்றும் பேராசிரியர் குறிப்பிடுகின்றார். "வாய்ப்பியம் என்னும் நூலுடையார், செந்துறையினை இசைப் பாட்டென்பர்" என்கிறது யாப்பருங்கல விருத்தி. இங்கு மேற்கோள் காட்டப்பட்ட சூத்திரத்திலிருந்து, மாமுன்நிரையும் விளமுன் நேரும் காய்முன் நேருமாக வரும் செப்பல் ஓசை இசைப் பாட்டின் ஒருவகை நடைக்கு அடிப்படையாக இருக்கின்றது என்பது தெரிகின்றது. நன்னூலுள்.

"ஆவியும் ஒற்றும் அளவிறந் திசைத்தலும்
மேவும் இசைவிளி பண்டமாற் ருதியின்"

என்னும் சூத்திரத்துக்கு எழுதிய விளக்க உரையில், மொழி யீற்றில் நின்ற உயிர் பன்னிரண்டு மாத்திரை அளவும், மெய் பதினொரு மாத்திரை அளவும் நீண்டொலிக்கும் என்பது இசை நூலார் கொள்கை' என்ற குறிப்பு உள்ளது. இக்குறிப்பும் இசை நடையின் அமைப்பை விளக்குகின்றது. ஒலியின் துணை யினலேயே இயங்கிப் பொருள் சிறக்கும் இசைப்பாட்டில் உயி ரும் மெய்யும் அமைவதற்கு இலக்கணம் தருகின்றதல்லவா?

தொல்காப்பியத்துக் கூறப்படும் பரிபாடல் அமைப்பு முறை இசைப்பாட்டோடு பெரிதும் தொடர்புடையதாகக் காண்கிறது. கொச்சகம், அராகம், சுரிதகம், சொற்சீரடி முதலிய உறுப்புக் களோடு வருவது பரிபாடல். சொற்சீரடி என்பதில், இடையே உரைவிரவி வருதலும் முற்றுப்பெருத குறையடிகள் வருதலும் முதலியன கூறப்படுகின்றன. இவையாவும் இக்கால இசைப் பாட்டுறுப்புக்களை ஒத்திருப்பினும் இசையின் முடிந்த நடை இதுவே எனக் கூறுதற்கில்லை. முன்னர் உறுப்புக்கள் விரவி வருவதும் ஒருவகை இசைநடை என்பதற் கேற்ப இதனை அதன் பாற்படுத்தலாம்.

இனி, 'பண்ணத்தி' எனத் தொல்காப்பியத்திற் கூறப்படும் பாட்டுவகையும் இசைப்பாட்டுத் தொடர்புடையதுபோலக் காணப்படுகின்றது. இதற்குக் கொடுக்கப்படும் 'பன்னீரடிப் பெருமை' என்னும் அடி வரையறையும் இதனை இசைப் பாட்டோவெனக் கருதச் செய்கின்றது. "முழுதும் அடியாகி வாராது இடையிடை ஓரோவடி பெற்று அல்லுழி யெல்லாம் பரந்துபட்டு வரவும் பெறும்" (செய். 183. பேர்.) எனக்கூறப் படும் விளக்கம் இதனைப் பரிபாடலோடு ஓரளவு தொடர்புபடுத் துகின்றது. அன்றியும் நாடகச் செய்யுளாகிய பாட்டுமடையும், வஞ்சிப் பாட்டும், மோதிரப் பாட்டும், கடகண்டும் முதலாயின இதற்கு எடுத்துக்காட்டுகளாக (செய். 180. பேர்.) க் காட்டப் பட்டிருத்தலும், பண்ணத்தி இசைப் பாட்டோடு நெருங்கிய தொடர்புடையதெனக் கருத இடந்தருகின்றது. இவ் எடுத்துக் காட்டுக்களில் ஒன்றான 'பாட்டுமடை' சிலப்பதிகாரத்தில் வரும்

இயல்பை ஆராயின் அது முன்னர்க் கூறப்பட்ட ஒருறுப்பால் வரும் இசைப்பாட்டுடன் நெருங்கிய தொடர்புள்ளதாயிருப்பது புலனாகிறது. எனவே பழந்தமிழ் இசைநடை பரிபாடல் பண்ணத்தி என்பவற்றின் இயல்புடையதாக இருந்துள்ளமை புலனாகிறது.

இசை நடையின் முக்கியமான சிறப்பு அதன் தாளத்திற் கமையுந் தன்மை. தாள வேறுபாட்டுக்கேற்ப எழுந்தும் விழுந்தும், நலிந்தும் செல்லும் ஒலியினாலேயே கேட்போருள்ளத்தைக் கவருகின்றது இசை. அக்கவர்ச்சியினூடே; சொல்லப்படும் பொருளுக்கேற்ற உணர்ச்சியும் தூண்டிவிடப்படுகின்றது. ஒவ்வோரடியின் இறுதி ஒலியும் ஒத்திசைத்துத் தாள அமைதியோடு இயங்குவதில் கூறப்படும் பொருள் வலியுறுத்தப் படுவதோடு, மன ஆழத்துக்கும் செலுத்தப்படுகின்றது. முற் கூறிய இயல்புகள் அனைத்தும், தாள அமைதியோடு இயங்கிப் பொருளும் தாளமும் ஒத்தறும்போதுதான் இசை இதபத்தைத் தொடுகின்றது. அத்தகு நிலையினைப் பெற்ற இசையையே உயிர் நடைபெற்ற இசை என்று கூற இயலும். எனவே இந் நடை இயல் நடையினின்று வேறுபடுவது இயல்பு. இந்நடையின் சிறப்பு நோக்கியே பிற்கால இலக்கியங்கள் இயல்நடை (செய்யுள் நடை) க்கும் இசை நடையின் பண்புகளை ஏற்றியுள்ளன.

இனி, நாடக நடையின் இயல்புகளை நோக்குவோம். பாட்டு மடையைக் குறிப்பிடும் பேராசிரியர் (தொல். செய். 180) 'நாடகச் செய்யுளாகிய பாட்டுமடை' என்று கூறுகிறார். எனவே பாட்டுமடை, உரைப் பாட்டுமடை என்பவற்றை ஆராயின் நாடக (செய்யுள், உரை) நடையின் தன்மைகள் புலனாகும் என்பது தெளிவாம். பேராசிரியரே (தொல். செய். 156 உரை) 'நாடகச் செய்யுள் வேறுவேறு துணிபொருள்— (நாடகச் செய்யுள் தனித்தனியே பொருள் அறுந்து நடக்கும்) எனக் கூறியுள்ளார். நாடகத்துக்குரிய சொல் (நடக்கும் முறை) மூன்று வகைப்படும் எனவும் அவை,

"நெஞ்சொடு கூறல்; கேட்போர்க் குரைத்தல்
தஞ்சம் வரவறிவு தானே கூறலென்(று)
அம்மூன் றென்ப செம்மைச் சொல்லே"

எனவும் குறிப்பிடுகிறுர் அடியார்க்கு நல்லார். இது நாடக நடையின் பகுதிகளை ஒருவாறு விளக்குகின்றது. இம்மூன்று வகைப் பேச்சிலும் நேர்முகப் பேச்சு முறையைப் பின்பற்றும் இயல்பே அமைந்துள்ளது. நாடக நூல் நடித்தற்கே சிறப்பாகச் செய்யப்படுதலின் இம்மூன்று முறையாகவும் அது நடைபெறு கின்றது. இவற்றுள் 'கேட்போர்க் குரைத்தல்' என்பது உரையாடல். அஃதாவது ஒன்றுக்கு மேற்பட்ட பாத்திரங்கள் நேருக்கு நேர் பேசிக்கொள்ளுதலாகும். மற்ற இரண்டும் தனி மொழியாகும். பாத்திரத்தின் மன நிலையை வெளியிட வேறு பாத்திரங்கள் பயன்படாதபோது, அல்லது பிறரைப் பயன் படுத்தக் கூடாத சூழ்நிலையில் இருக்கும்போது தனி மொழியால் அது வெளியிடப்படும்.

இனி, நாடகம் காட்சிக் கலையாகலின் நட, நடிகளின் நடிப் புக் கேற்ப உரையும் அமைதல் வேண்டும். எனவே உரையாட லில் சுவைகளை வெளியிடும் பான்மை மிகுந்திருக்கவேண்டும். அங்கங்கே குறிப்பிட்ட சுவைகளை முறையாக வளர்த்துக் காட் டும் ஆற்றலுள்ளதாக அமையவேண்டும் நடை. சிலப்பதிகாரத் தின் இருபத்து நாலாவது பகுதியாகிய 'குன்றக் குரவை' நாட கத்தின் நேர்முக உரையாடல் முறைக்குச் சரியான எடுத்துக் காட்டு.

நாடகத்தின் உறுப்பாகக் கூறப்படும் சந்தி என்பது நாடக நடையின் செறிவுத் தன்மையின் இன்றியமையாமையை விளக் கும். முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த்தல் என்னும் ஐந்தும் சந்தியின் பகுதிகளாகக் கூறப்படுகின்றன. (சிலப். அரங்கேற்று. வரி 13. அடியார்க்கு நல்லார் உரை). முளைத்து நாற்றாகிக் கருக்கொண்டு விளைந்து துய்த்தற்குரிய பயன்தரும் பயிர்போல் நாடகப் பொருளும் நடக்கும் முறையில் இடையற வின்றி வளர்ந்து முடிய வேண்டும். இதனுல், எடுத்துக்கொண்ட பொருளைத் தகுந்த நிகழ்ச்சிகளால் தெளிய விளக்கிச் சுவை யுணர்வை வளர்த்துக் காட்டுவது நாடக நடையின் இயல்பென்

பது பெறப்படுகின்றது. அன்றியும் பொருள் நெகிழ்ச்சி, மற்றொன்று விரித்தல், சென்று தேய்ந்திறுதல் எனுமியல்புகள் நாடக நடைக்கு ஒவ்வாதன என்பதும் விளங்குகின்றது.

இங்கு விரித்துக் கூறப்பட்ட இசைநடை தனித்தியங்குவதாயினும் நாடக நடை, உரை நடையும் செய்யுள் நடையுமாகிய நடைகளுக்குள் அடங்காதோ? என்ற வினா எழுகின்றது. மேற்போக்காகப் பார்க்கும்போது நாடக நடை அவ்விரு நடைகளுள்ளும் அடங்கிவிடுவதாகவே தோன்றும். அதற்குக் காரணம் பிற்கால இலக்கியங்கள் நாடக நடையையும் தம்முள் ஏற்றுக் கொண்டிருப்பதேயாகும். ஆயினும் அவை, பேசுகின்றவனுடைய பெயரையும் குறிப்பிட்டு, இடையே அவன் பேசிய செய்தியைச் சொல்லி, இறுதியில், எனச் சொன்னான்'—என்று அறைந்தான்'—எனக் கழறினான்' என்பன போன்ற வினைகள் கொடுத்தே பொருள் முடிபு செய்யவேண்டியுளது. நாடகமோ பேசும் செய்தியை மட்டிலும் கூறி அமையும்.

இலக்கியத்தை உரை நடை, செய்யுள் நடை என இரு பகுதிகளாக வகுத்துக்கொள்ளும்போது உரைநடை செய்யுள் நடைகளின் இயல்புகளே விளங்கும். நாடகமாகவும் பாட்டாகவும் அமைந்துள்ள இலக்கியங்களை முற்கூறப்பட்ட நடைகளுக்குரிய இயல்புகளை அடிப்படையாகக்கொண்டு ஆராய்தல் முழுப் பயன் தராது. எனவேதான் நாடக, இசை நடைகளும் அவற்றின் தன்மைகளும் தனியாகப் பிரித்துக் கூறப்பட்டன. நாடகத்தின் விரைந்த இயக்கத்தையும் இசையின் நெகிழ்ந்த செலவையும் உரைநடை செய்யுள் நடைகளோடு பிணைத்துக்கொண்டு செய்யப்படும் இலக்கிய ஆய்வு நிறைவு பெற்றதும் நேர்மை தழுவியதுமாக அமைய இயலாது. ஆதலின் இலக்கியங்களை நடை வேறுபாட்டுக்கியைய முதற்கண் பிரித்துக்கொண்டு, அவ்வந் நடைகளின் இயல்புகளோடு ஒத்தியங்கத்தக்க ஆய்வுமுறைகளைப் பின்பற்றி ஆராய முற்படவேண்டும். உரைநடையை நோக்கும் கண்கொண்டு செய்யுள் நடையை நோக்க இயலாது அதுபோலவே நாடக நடைக்கும், இசை நடைக்கும் வெவ்வேறு அமைப்பு முறைகொண்ட ஆராய்ச்சி வேண்டும். அத்தகைய ஆராய்ச்சியே சிறந்த பயனும் மிகுபயனும் விளைக்கும்.

இலக்கியம் (1)

இரா. இளந்திரையன், B. A. (Hons.)

விலங்குகளோடு விலங்குகளாக வாழ்ந்து வந்த மனித இனம், காலப்போக்கில் இயற்கையினின்று தன்னை ஒருவாறு விடுவித்துக்கொண்டு செயற்கை முறைகளையும் நாகரிக வாழ்வையும் வளர்க்கத் தொடங்கியது. இப்புதிய வாழ்க்கை முறையினுல் வாழ்வின் தேவைகளும் அவற்றிற்கான பொருட்களும் மிகலாயின. மனித இதயத்தில் எப்போதும் தோன்றி வளர்ந்து மடியும் உணர்ச்சிகளுக்கு உருவம் கொடுக்கும் வசதியும் கிடைத்தது இப்போது... இவ்வசதியே கலைகளின் பிறப்புக்கும் வளர்ச்சிக்கும் காரணம் எனலாம்.

என்றே ஒருநாள் யாரோ ஒரு மனிதன் கடற்கரையில் நின்று காலைக் கதிர் எழும் கைபுனைந்தியற்ருக் கவின்பெறு வனப்பினைக் கண்டான். உள்ளத்தைக் கொள்ளைகொண்ட அவ் ஒப்பற்ற காட்சி சிறிது நேரத்தில் மறைந்து விட்டது! பார்த்து நின்ற மனிதன் எதையோ இழந்துவிட்டவன்போல உணர்ந்தான். 'இந்த இனிய காட்சி, எப்போதும் காணக்கிடைக்காத எழில்மிகு காட்சி எப்போதும் கண்டுகளிக்கக்கூடியதாக இருந்தால் எவ்வளவு நன்ருக இருக்கும்!'-என்று எண்ணினுன். நிலையற்ற அந்தக் காட்சிக்கு நிலையான தன்மை கொடுப்பது எப்படி?-என்று நினைத்துநினைத்து நேரத்தைப் போக்கினுன்!......

சோலைகளடர்ந்த மலைச்சாரலில் அமர்ந்திருந்தான் ஒரு மனிதன். தன்னைச் சுற்றியுள்ள இயற்கை வனப்புக்களில் இதயத்தை ஒன்ற விட்டிருந்த அந்த எண்ணக் கிறுக்கன், பாடும் பறவை இனத்தையும், வீசும் தென்றலையும், வழியும் அருவியையும், வளர்ந்து செழித்து மலர்ந்து மணங்கமழும் சோலையையும் தன் உள்ளத்தோடு ஒன்ற வைத்துக்கொண்டிருந்தான். அவனது ஒவ்வொரு புலனும் தன்தன் வழியில்சென்று தான் தேடிய இன்பத்தை அவன் உள்ளத்தில் கொண்டு வந்து கொட்டிக்கொண்டிருந்தது. தன்னிலை மறந்த தனி நிலையிலிருந்தான் அவன். பொழுது போய்க்கொண்டேயிருந்தது. மாலை வெயில் படர்ந்தது. அவன் கண்ணையும் கருத்தையும் கட்டிப் பிடித்துக்கொண்டுள்ள அவ்வினிய சூழலில், எங்கோ ஒரு மூலையில் புதிய உருவம் ஒன்று தோன்றியது.

(தொடரும்)

தமிழா!

தமிழ் நெஞ்சன்.

கலைமேவிய தமிழா!ஒரு கணமும்தரி யாதே
உலைமேவிய அனலேய இருகண்சிவப் புறவே
தலைபோயினும் தமிழ்காத்திடத் தயங்கேனென வுரையாய்
இலையேபகை இலையேஇனி இனிதேவிளை வுறுமே.

தமிழுக்கொரு குறையாமெனில் தமிழர்க்கென வுணராய்
தமிழைக்குறை புரிவோர்ஒரு தலையாயவர் எனினும்
உமியொப்பவர் எனவேயுன துளத்தேநினைந் துடனே
அமையாதெழுந் தவருக்குநம் அருமைத்தமிழ் உரையாய்!

எண்ணில்கலை எண்ணில்தொழில் எண்ணில்வள முடைய
கன்னித்தமிழ் தன்னிற்பல கன்னல்நிகர் கவிதை
பன்னிப்பல நாளும்தமிழ்ப் பாவையுளம் குளிர
எண்ணும்பணி செய்வாயது என்றும் புகழ் தருமே.

உரைமேவிய தமிழ்நூல்பல வுளதாமென வுரையாய்
தரைமேவிய மொழியுள்தமிழ் தலையாயதென் றெவரும்
அறியும்படி அறிவைத்தரும் அளவில்கலை போற்றி
அரியாசனத் தழகுத்தமிழ் அமரும்பணி புரிவாய்.

தமிழ்த்தாய் வணக்கம்.

பொருளில்லேன் புகழில்லேன் பொங்கும் இன்பம்
பொலிகின்ற உள்ளமிலேன் அன்பின் செல்வ
அருளில்லேன் அறங்களிலேன் அணையும் சுற்றம்
அருகில்லேன் அறிவில்லேன் எனினும் கண்முன்
தெரிகின்ற தொன்றுண்டு தெளியக் கூறின்
தெள்ளுதமிழ் நீயல்லால் வேறென் றில்லேன்,
மருவினிய செந்தமிழே! இன்பம் நல்கும்
மாமருந்து நீயல்லால் வேறென் றுண்டோ?

— க. சபாபதி.

வழி

ந. சகதீசன், *புலவர் மாணவர்.*

நான் தன்னந் தனியனாக நின்றழுது கொண்டிருந்தேன். என்னருகில் யாருமே யில்லை. எத்திசையும் புதுமை பூத்து என் கண் முன்னே காட்சியளித்தன. அங்குக் காணும் பொருள்களை யெல்லாம் என் கண்களை அகல விரித்து அமைதியாகப் பார்த்தேன். வழிகள் பல வரவேற்பளித்துக்கொண்டிருந்தன. எந்த வழியிற் செல்லுவதென்பது எனக்குப் புரியவில்லை. கதிரவன் மறைந்தான். தோன்றினான், தோன்றினான் மறைந்தான். நாட்கள் அங்கு மரங்களிலிருந்து விடும் இலைகளாகக் காலக் கொடியிலிருந்து வீழ்ந்து, வீழ்ந்து மறைந்தன! எனது நிலைமையில் மாறுதலில்லை. இளமைத் துடிப்பும், இன்ப விழைவும் என்னுள்ளே நடமிட்டன. எண்ணம் விரியவில்லை. அதனால் நெஞ்சில் துணிவும், கோழைத்தனமும் வானில் கதிரும் காருமாகக் காட்சியளித்தன. கதிரைக் கார் துரத்தும். கதிர் காரினின்றும் ஓடியோடி விடுதலை பெறும் ஒருபொழுது கதிரின் காட்சி. மறுபொழுது காரின் ஆட்சி. என்னை யறியாமல் என்னுள்ளிருந்து எழும் அழுகை யொலியும், நகையொலியும் என்னை அல்லற்குள்ளாக்கின. எல்லாம் கனவிற் கண்ட திரையோவியமாகக் காட்சியளித்தன. கண்களை மீண்டும் அகல விரித்து நோக்கினேன். வழிகள் தோன்றின. நின்றுகொண்டேயிருந்தால் என்ன பயன்? தொடங்கு செலவை! என்று என்னை அறிவுறுத்தியது என் சிந்தனை. வழியிலே காலையெடுத்து வை. வழியின் முடிவில் இன்ப வாழ்க்கை வெற்றிக்கு வாகை சூடி வரவேற்கின்றவன் இருக்கின்றான். 'செல்! செல்! நில்லாதே' என்ற உள்ளக் குரல் என்னை உந்தியது.

அவனைக் காண அவாவினேன்! அவனிருக்கும் இடத்தை நோக்கிக் கால்களை என் மனம் நகர்த்திற்று. கனிகுலுங்கும் காட்டு மரங்கள் வானத்தின் செவியில் எதையோ பேசிக்கொண்டிருந்தன! விண்ணை முத்தமிட்டு நிற்கும் அந்த வெற்பின்

காதல் பாட்டை அருவி இசைத்துக்கொண்டே மண்ணில் வீழ்ந்தது.

நெடுமரங்கள் கனிகளை உதிர்த்தன. கனிகளின்றி வெறுங் கையனுகச் செல்ல எனக்கு விருப்பமில்லை. 'கனி கொய்க' என்று என்னுள்ளம் என்னையறிவுறுத்தியது. குனிந்து கனி களைப் பொறுக்கலானேன். மிக்க கிளர்ச்சியோடு முயற்சியிலீடு பட்டேன். எல்லாக் கனிகளையும் பொறுக்கிவிட என்னுள் ஆர்வம் பெருக்கெடுத்தது. பொறுக்கினேன் முழுமுயற்சியுடன். எனது இரண்டு கைகள் ஆற்றலற்றவையாயின. ஒவ்வொன்று கப் பொறுக்குவதென்ருல் எவ்வளவுகாலம் பொறுக்குவது? எல்லாவற்றையும் என்று பொறுக்கிக் கைக்கொள்வது.

என்ன செய்வது? ஒவ்வொன்ருகப் பொறுக்கினேன். முயற்சியோடு கிளையிலிருந்தவற்றைக் கொய்தேன். எல்லாம் கைநழுவி முட்புதரில் அகப்பட்டுக்கொண்டன. சீச்சீ! இந்தப் பழம் புளிக்கும்' என்று சொல்லிவிட்டு நகர்ந்தேன். ஓர் உயர மற்ற மாம் கனிகளைக் கிளையில் தாங்கி 'ஒயிலாக' ஆடிக்கொண் டிருந்தது. கைகளை நீட்டினேன். கனிகள் கைகளிற் றஞ்சம் புகுந்தன. கனிகளைக் கொய்வதில் பொழுது மூடித்திறக்கும் இமைப் பொழுதாக வோடியது. எண்ணிறந்த கனிகளைச் சேர்த்துவிட்டேன் உள்ளம் பெருமிதத்தில் மிதந்தது.

கனியின் சுவையைக் காண உள்ளம் துடித்தது. ஒன்றைச் சுவைத்துப் பார்த்தால்தான் என்ன? என்று எண்ணி உதட்டில் ஒரு கனியை வைத்துச் சுவைக்கத் தொடங்கினேன். அழகைக் காட்டி என்னை அடிமையாக்கிய அதன் கசப்பை என்னவென்று சொல்லுவது. இக்குட்டை மரத்தில் கோடி கனிகள் கொய்வ திலும் அந்நெடுமரத்தின் ஒரு கனியே போதும் என்று எண்ணி னேன். கனிகளைக் கொட்டிவிட்டுப் பழைய மரத்தினடிக்கு ஓடினேன். குற்றஞ்செய்த சேய் தன் தாயின் அணைப்பை நாடி ஓடுவதுபோல, அந்த நெடுமரத்தின் உச்சியைப் பார்த்தேன். விழியை நீர் மறைத்தது.

கனிகளைப் பொறுக்கத் தொடங்கினேன். கொய்யவேண் டிய தேவையில்லாததால். ஏற்கனவே உதிர்ந்து கிடக்கும்

கனிகளைப் பொறுக்குவதை விடுத்து ஏன் கொய்யவேண்டும்? முட்களுக் கிடையே கிடக்கும் கனிகளை எடுக்கும்பொழுது என் னுள் இன்பம் பொங்கியது. உடல் துன்பத்தால் துடித்தது. ஒவ்வொன்ருகப் பொறுக்கினேன். ஒன்றைப் பொறுக்கக் குனி யும்பொழுது மற்றது விழுந்து விடுகின்றது. எல்லாக்கனிகளை யும் பொறுக்கினேன். ஆனுல் ஒன்று கூடத் தங்கவில்லை. முயற்சி தளர்ச்சியைக் கொடுத்தது.

ஒரு முடிவுக்கு வந்தேன். ஒரே ஒரு கனியை மட்டும் எடுத்துக்கொண்டேன். மெல்ல நடந்தேன் வழியில்.

என்ன விந்தை! என்னையறியாமல் வேறு வழியில் நடந்து கொண்டிருந்தேன். அஃதென் னுள்ளம் உவக்கும் ஒரு நல்ல வழியாகத்தான் தென்பட்டது. அவ்வழியில் விலங்குகள் நடந்து சென்றமைக்கு அறிகுறியாகப் பல காலடிச் சுவடுகள் காணப் பட்டன. இடையிடையே மனிதனது காலடிச் சுவடுகளும் காணப்பட்டன. இரண்டும் மயங்கிக் கிடந்தன. ஏனென்று எனக்குப் புரியவில்லை. புரிந்துகொள்ளச் சிந்தையிலே விருப்ப மில்லை. நடந்துகொண்டே யிருந்தேன். எளிய அந்த வழி என் னெஞ்சை ஈர்த்துவிட்டது. உள்ளம் உவக்க ஒரு பாட்டைப் பாடினேன். பாடிக்கொண்டே நடந்துகொண்டிருந்தேன்.

ஆனுல் அந்தோ! திடீரென்று என்னை நோக்கி ஒரு கொடு விலங்கு விரைந்தது. மருட்கை என்னை மாய்த்துவிட்டது. கையிலிருந்த கனி — அந்த ஒரே ஒரு உயர்ந்த கனி; ஒப்பற்ற தீங்கனி என்னையறியாமல் என்னைவிட்டு நழுவியது. அதைத் தேட எண்ணமில்லை. அச்சத்தால் அலறிப் பதறித் திரும்பி யோடினேன். அந்த நெடுமரமிருந்த அந்தப் பெருவழியின் தொடக்கத்தில் மீண்டும் வந்து நின்றேன். என்னுள்ளம் அச்சத் திலிருந்து விடுதலை பெறவில்லை; அமைதி கிடைக்கும் என்ற உறுதியையும் இழக்கவில்லை. நின்ற இடத்திலேயே நின்று விட்டேன். அந்த நெடுமரத்தின் கிளையொன்றில் குயிலொன்று பாடிக்கொண்டிருந்தது. என்னைக் கண்டதும் பண்பாடும் பணியை முடித்துக்கொண்டது.

'மனிதவுரு நீங்கிக் குயிலுருவம் வாராதோ' என்று பாடினுன் கவிஞன். உன் பொன்னுருவம் எங்ஙனம் கிடைக்கும்? உனது உயர்வை இந்தத் தாழ்ந்த மனிதன் பெறமுடியுமா? நீ பாடும் பண்ணிலே தூய்மை இருக்கின்றது, எளிமையிருக்கின்றது, இன்பம் பொங்குகின்றது. மனிதன் பாடும் பண்ணிலோ தீய எண்ணம், பயங்கரச் சிரிப்பை உமிழ்கின்றது. அதிலே பொருமைத் தீ பொங்குகின்றது. வஞ்சமும் வன் கண்மையும் அதிலே நிறைந்து வடிகின்றன. மனிதன் விண்ணில் பறவையாகப் பறக்கின்ருன் குயிலே! மீனுக நீரிலே நீந்துகின்ருன் குயிலே! ஆனுல் மண்ணிலே மனிதனுக நடக்கக் கற்றுக் கொள்ளவில்லையே! எனதருமைக் குயிலே! நீ எங்ஙனம் இவ்வாறு பாடக் கற்றுக்கொண்டாய்! ஏன் மறந்துங்கூடக் கிளி மொழியில், குருவி மொழியில் நீ பாடுவதில்லை! உனது மொழிப் பற்றுத்தானே அதற்குக் காரணம்? மனிதர் வாழும் இந்த உலகில் வாழ்ந்தும் உன் தூய்மை குன்ருமலிருப்பது எங்ஙனம்? உன் குரலில் அமர்ந்து யாரோ ஒருவன் தீங்குழல் ஊதுகின்ருன். நீ உன் இசைப்படி அதைத் தென்றல் மூலம் உலகில் பரப்பிக் கொண்டிருக்கின்ருய். உனது இசையேறிவரும் தென்றல் தேர் உலகைச் சுற்றிச் சுற்றி வருகின்றது.

உன்னுடைய உருவைப் பெறுவதற்கான வழியைப் பாடு. நான் உனது ஆட்சியில் ஒரு எளிய குடிமகனுக வாழ்வேன். அஃதே யென் மனத்திற்கு நிறைவு தரும். நீ உள்ளத்தை வெண்மையாக வைத்துக்கொண்டு வேண்டாத கருமை எதுவென்று காட்டப் புறத்திலே கருமையைத் தாங்கி நிற்கின்ருய். அந்தக் கருமையில் கூட அழகிருக்கின்றது குயிலே! அதை நீ ஆளக் கற்றிருக்கின்ருய். கருமை உன்னை யாண்டதே யில்லை. ஆண்டிருந்தால் உள்ளப் பேருலகின் உயராசை நீத்துப் புறத்தே வந்து வெயிற்கும் மழைக்கும் வாடுமா? ஆனுல் மனிதனே, நீ வெளியில் வைத்திருக்கும் கருமையை மிகக் கண்காணிப்போடு உள்ளத்தே வைத்துக்கொண்டு வெண்மைக்கு விடுதலை கொடுத்துவிட்டான். அதை வேலியாகக் காத்த அறிவும், அன்பும் அகன்ருேடின.

இளவேனிற் காலத்து இளவரசியே! உன்னை இயற்கை யுலகு எவ்வளவு ஏற்றத்துடன் நடத்துகின்றது. உன்னை ஏற்றுக்கொள்ளாத மரக்கொம்புண்டோ! கொம்பிற் கொலுவருந்து நீ கூவிடுமோர் குரலாலே பட்ட மரம் பனி மலரைக் காட்டி மட்டில்லா மகிழ்விலே ஆடுகின்றதே! உனக்கு அவை நறுஞ் சுவைக் கனிகளைப் பெரு விருந்தாக அளிக்கின்றன! நீ கனிகளை உனது மணிவாயால் பற்றும்பொழுது என்னை இன்பம் பற்றுகின்றது. மனிதன் உண்பதைக் கண்டால் மனம் எரிகின்றது. எவனுடைய வாழ்வையாவது வஞ்சித்தும், எவனுடைய உழைப்பையாவது திருடியும், தன் வயிற்றை நிரப்பிக்கொள்ளும் அக் குற்றக் கொல்கலங்களைக் கண்டால் நெஞ்சு பதைக்கின்றது, குயிலே!

சோலைச் செல்வியே நீ, நன்றி மறவாது அவற்றின் இனப் பெருக்கத்திற்குத் துணைபுரிகின்றாய். உனது கடமை யுணர்வை என்னென்பது! மனித வுலகில் உன்னைப்போல ஒருவன் தவறிப் பிறந்துவிட்டாலும், அவன் வாழ்வு அவ்வளவுதான், ஒழிந்தது! நாட்கள் ஒவ்வொன்றும் துன்பத்தை யள்ளி யள்ளி அவன்மீது வீசி அவனை அழித்துவிடும். அவனை ஏற்றுக் கொள்ள யாருமே கிடையாது அவன் அஞ்சாமை கொண்டு பாடினாலும் அவனது பாடல் மனிதரின் வன் செவியில், மரச் செவியில் ஏறாது! மனிதரின் உள்ளக் கதவைத் தட்டிப் பார்க்க ஒருமுறைகூட அவனுடைய பண்ணுக்கு வாய்ப்பில்லை. இரும்புக் கதவால் இறுக மூடப்பட்டுள்ள அந்த உள்ளங்கள் விடுதலை பெறுமா! உனது பண்ணிற்கு இயற்கை யுலகு என்னான்றும் தனது உள்ளக் கதவைத் திறந்துவைத்து 'நல்வரவு' கூறுகின்றது. எனவேதான் குயிலே! நீ மனிதனைவிட எவ்வகையிலும் உயர்ந்திருக்கின்றாய்! அன்பு கனல் பிறக்க இன்பக் குரலெடுத்துக் குயிலே! எழுப்புக இவ்வுலகை உனது பண் தென்றல் காற்றாக வண்டாடும் மாமலரை வலம்வர வேண்டாம். புயலாக வீசித் தடைகளை உடைத்தெறிந்து இசைப்பெரு வெள்ளத்தைப் பாய்ச்சு! மடை திறந்த வெள்ளமாக மனித வுள்ளக் கடுங்கதவு களைத் திறந்துகொண்டு இசை வெள்ளம் பாயட்டும். மாசுக்களை ஓட்டி மனிதனை உய்விப்பதாக குயிலே! நீ பாடு! மயில் உன் பாடலுக் காடுவதுபோல மனித வுள்ளமும் உன்பாட்டிற் காட

வேண்டும். உறுதியாக ஆடும்! அன்பே பாடு! உலகின் துயரப் பண்ணைக் கடந்து உன் இன்பப் பேரிசையைப் பரப்பு! கருவண்ணக் கவின் குயிலே பாடு! காலந் தாழ்த்தாதே பாடு, பாடு! பாடு!! அழகுக் கொடியில் பூத்த இசை மலரே! எங்கே! பாடு! பாடு!!

இவ்வளவும் என்னை மறந்த நிலையிலே நான் பேசியவை. உணர்வு வந்து உற்றுப் பார்த்தேன்! கதிரவன் மறைந்துவிட்டான். எனது வாழ்க்கைக் காலக் கொடியில் பல இலைகள் உதிர்ந்துவிட்டன. இன்று வீழ்ந்த இலை என்னை உணர்ச்சிக்குள்ளாக்கியது. இவ்வளவு மறிகின்ற எனக்கு ஏன் இன்னும் துணிவும், தெம்பும் பிறக்கவில்லை! இன்றிரவு கழியட்டும் நாளை பொழுது புலரட்டும். வெற்றி முழக்கமுடன் இந்த வழியில் சென்றுவிடுவேன். எனதருமைக் குயிலே உறுதியாகச் செல்வேன் என்று சொல்லிக் கிளையைப் பார்த்தேன். அங்குக் குயிலில்லை. பாட்டில்லை. அந்நெடு வழியும் கண்ணுக்குப் புலனாகவில்லை. சரி இந்த இரவு கழியட்டும். நாளையதினம் எனது இன்பச் செலவைத் துணிவோடு தொடங்கி விடுவேன்! வெற்றியுண்டு! வேண்டு மின்பமுண்டு! கொய்யக் கனிகள் பலவுண்டு. கொய்யத் திறனு மிகவுண்டு.

இந்த இரவு இன்னும் கழியவில்லை. கழியாப் பேரிரவு என்று நீங்குமோ! தெரியவில்லை. பொழுது புலர்ந்தால் வெற்றி! இன்னும் புலரவில்லை! என்று புலருமோ!

திரும்பி விடு.

*

" இனியவன் "

1. அம்மா எமதன்புத் தெய்வமே நீயெமக்கு
விம்மா வருந்துயரம் விளைவித்துச் சென்றேயோ ?

2. தும்பை மலர் துவண்டு போவதுபோல் நீசெல்லத்
தம்பி தவிக்கின்றன் தங்கை கலங்குகிறுள்.

3. அக்கா அழுகின்றுள் அப்பா அயர்கின்றுர்
தக்கார் துணையின்றித் தாய் துயில் சம்மதமோ ?

4. மட்டிலா அன்பு சுரக்க மடிமீது
தொட்டிற் குழந்தையினை தூக்குதற்கு வாராயோ ?

5. ஆடுகின்ற தங்கையினுக்(கு) ஆடல் பயிற்றி உடன்
பாடுகின்ற தீங்குரல் எம் பக்கமினிக் கேளாதோ ?

6. நிலவின்பாற் சோறூட்ட நீவேண்டு மென்றம்மா
இலைஎன்பான் நெஞ்சினிக்க இனிமேல்நீ வாராயோ ?

7. நறுநெய் அளைந்துகறி நாலமைத்துச் சோருக்கி
அறுசுவையும் அன்புடனே நீயளிப்பதெக்காலம்.

8. திருந்து மொழிபேசி தேனுய் உணவளித்து
விருந்து புரந்தரற்கு வீட்டிலினி யாரம்மா ?

9. கதையும் கருத்தமைந்த காவியமும் பேசுடலே
சிதையின் நெருப்பணுகச் சேர்ப்பாயோ என் அம்மா !

10. எங்குன்னைக் காண்போம் இனிமேல் உனைமறந்து
தங்குமொரு வாழ்வெமக்கா ? வேண்டாம் திரும்பி விடு.

முற்பகுதியின் தொடர்ச்சி.

தையற் றெழில்

வித்துவான். த. பொ. தண்டபாணி, B. A.,

பதினெண்கீழ் கணக்கு நூல்களுள் ஒன்முன ஆசாரக் கோவையிலுங்கூட செய்யுள் 91-ல் "மோட்டுடைப் போர்வை" என்ற சொற்றொடர் வந்திருக்கின்றது. "மோடு" என்ருல் உயர்வு என்று பொருள். உடம்பில் உயர்ந்த பாகம் இடுப்புக்கு மேல் அமைந்திருப்பது. எனவே இடுப்புக்குமேல் கழுத்து வரைக்கும் அல்லது தலைக்குச் சேர்த்துகூட என்றுஞ் சொல்லக் கூடிய பாகம் முழுமைக்கும் அணியப்படும் போர்வைக்கு "மோட்டுடைப் போர்வை" என்று கூறப்படுகின்றது. மோடு என்று சொல்ல மோட்டு என ஒற்று இரட்டித்தல் என்ற விகாரத்தில் வந்திருக்கின்றது. அது எதுவாயினும் ஆகுக. அரைக்கு மேல் தரிக்கப்படும் போர்வைகள் எவ்வளவு சிறியவை ஆயினும் அல்லது பெரியவை ஆயினும் அவற்றின் நாற்புறங்களும் மடித்துத் தைத்திருக்கும் என்பது ஒருதலை. எனவே போர்வைகள் தைக்கும் வேலை கூட அன்றுமுதல் இன்றளவும் நிலவி வரும் தமிழ் நாட்டுத் தையல் வேலைகளுள் ஒன்றேயாம்.

அத்துடன் "கார் நாற்பது" என்ற நூலும் மேற்படி பதினெண்கீழ் கணக்கு நூல்களுள் ஒன்றே. அதில் செய்யுள் 11ல் "வணர் ஒலி ஐம்பாலாய்" என்ற சொற்றொடர்கள் எனக்குக் கிடைக்கின்றன. இதன் பொருள் என்னே? நோக்குவோமாக. வணர்=குழற்சியை (உடைய) குழலும் சுழலும் உடைய பொருள்கள் பல. அவற்று ஒன்றே "வாணம்" என்பது. அதை நாம் வெடிக்கும்போது அது விசும்பகத்தே ஊடுருவி மேனேக்கி எழுந்தோடுங்காலை, கோணலாக குழன்றும், சுழன்றும் ஓடக் காண்கின்ரேம். வணர்தல் என்ருல் வளைதல் என்ற பொருள் இருப்பதை நாம் மறத்தற்கில்லை. வானகத்தே வளைந்து வளைந்து நெகிழ்ந்து ஓடுங்காரணத்தால் "வாணம்" என்ற சொல்லும் வெடிக்குப் பொருந்தியது போலும்!

ஆக, "வணர் ஒலி ஐம்பாலாய்" என்ற சொற்றொடரை நோக்குவோமானால், "வளைதலை (குழற்சியை) உடைய தழைத்த கூந்தலை உடையாய்" என்ற பொருள் கிடைக்கின்றது. ஆனால் அச்சொற்றொடருக்கு விரிவுரை எழுதிய நமது திருவாளர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் ஐவகைக் கூந்தலை அறிவுறுத்திச் சென்றுளர். ஐவகைக் கூந்தலாவன : குழல், கொண்டை, முடி, பனிச்சை, சுருள் என்பன. கொண்டைக்கும் முடிக்கும் தையல்வேலை வேண்டியதில்லை. 'குழல்' என்றசடையை (சடைகளை)ப் பின்னிப் போட்டுக்கொள்வதற்குங்கூட தையல் தொழில் வேண்டாம் என்பேன். ஆனால் நவீனப் பெண்மணிகள் "குழல்" அணிவதற்கும் ஊசியும் நூலுங்கொண்டு உட்கிடக்கும் மயிர்களை தைக்கின்ற பழக்கம் அசாமிலும், மலபாரிலும் இன்று கூட அடியேன் மட்டும் அல்ல; அனைவருமே கண்கூடாகக் காண லாம். ஆனால் இனி கூறப்போகும் சுருள், பனிச்சைஎன்ற இரு வகைக் கூந்தல் அணிதலுக்கும் தையல்தொழில் தெரிந்திருந்தால் அன்றி முடியாதென்க. "பனிச்சை" என்னும் முடியை நவீனப் பெண்கள் தற்காலத்தில் "ஒட்டு மயிர்" தலைமயிர்வாங்கிக் கட்டிக் கொள்கின்றனர். ஆனால் மிகப்பழைய காலத்தில் நமது மாநிலப் பெண்கள் இலேசான மரக்கட்டைகளைத் தங்கள் கூந்தலுக்குள் அமைத்து அதன் நாற்புறத்தும் ஊசியும் நூலுங்கொண்டு தைத்துக்கொள்வர். அப்போது அவர்கள் தலைநிறைய அடர்ந்த மயிர் உடையவர்களாகக் கருதப்படுவர். "சுருள்" என்பதை நான் விளக்க வேண்டியதேஇல்லை. ஏன் எனில் தற்காலக்கடை களில் ஏராளமாக மயிர்ச் சுருள்கள் நன்கு தைக்கப்பட்டுப் பல் வேறு அளவுகளில் வட்டம் வட்டமாக விற்பனைக்கு வந்துள. நமது பெண்களின் தலையிலுங்கூட அவைகள் விளங்கக் காண லாம். இக்கொடிய பழக்கம் நாம் வழிபடும் மூர்த்திகளான பார்வதி, சிவகாமி, காளி, தெய்வயானை, உருக்குமணி, வள்ளி போன்ற சிலைகளைத் திருவிழாக்காலங்களில் நன்கு சிறப்புற அணிவித்து பெருந்தெருக்கள் வழியே உலாவுக்கு வரும்போது

அவற்றின் பின்புறம் நோக்குவோமானால், "சுருள் குழலும்" "தாழ்சடையுமாக" விளங்குவதைக்கண்டு யார்தான் நகார்?

எனவே, "சுருள்—பனிச்சை" ஆய இரண்டுக்கும் ஊசியும் நூலும் கொண்டு தைக்கின்ற வேலை வேண்டற்பாலதென்ற கருத்துக்கு பெரும் ஆதரவு கிடைத்துவிட்டது.

மேலும் அதே "கார்நாற்பது" என்ற நூலின்கண் செய்யுள் 22-ல் 'இளையரும் ஈரங்கட்டு அயர"—என்ற சொற்றொடர் போதருகின்றது. இங்கே "இளையர்" என்ற சொல் "சேவகர்" என்ற பொருளை உணர்த்துகிறது. தளராதும், மூப்பின் காரண மாக சலிக்காதும் உழைக்க வேண்டிய பொறுப்பு சேவகர்களுக்கு இருக்கிறதென்பதை நாம் உணருகிறோம். "எட்டாள் வேலையை ஒரு சிட்டாள்" செய்வான் என்ற பழமொழியையும் நாம் மறக்க மாட்டோம். இளமை சோர்வு இன்னதென்றே அறியாது. இளைக்காது வேலை செய்பவன் எவனோ அவனே இளைஞன் ஆவான். நாட்டுக்குப் பாதுகாக்கும் தொழிலைச் செய்வோன் சேவகன். அவன் இளைத்தபாடில்லை. ஆதலால் தான் "இளையரும்" என்ற சொல்லுக்கு "சேவகரும்" என்ற பொருள் கூறப் பட்டிருக்கிறது. இது இருமடி ஒட்டுப் பண்பாகு பெயராக வந்திருக்கின்றது.

இனி ஈர்ம் என்ற சொல்லைக் கவனிப்போம். அது ஈரம் என்ற சொல்லின் திரிபாகும். ஈரம் என்றால் குளிர்ச்சி என்று பொருள்படும். ஆனால் இங்கு குளிர்ச்சியையுடைய (குளிர்) காலத்தைக் காட்டுகின்றது. எனவே பண்பாகு பெயராயிற்று. அதற்குமேல் "கட்டு" என்ற சொல் அச்சொற்றொடரில் வரு கிறது. அதற்குப் பொருள் "உடை" என்பதாம். கடைசியாக "அயர்" என்ற சொல்லுக்கு "உடுக்க" என்ற பொருள்கொண்டு "இளையரும் ஈர்ங்கட்கு அயர" என்ற சொற்றொடருக்கு "சேவ கரும் குளிர்காலத்திற்குரிய உடையினை உடுக்க" என்ற முழுப் பொருளைப் பெறவேண்டும். 'சேவகரும்" என எச்ச உம்மைப் போட்டுக் கூறியிருப்பதால் ஏனையோரும் என்பதுசொல்லாமலே விளங்குவதாகும். "சேவகரும்" — என்பதில் உள்ள உம்மை இழிவு சிறப்பும்மை என்பர். எக்காலத்தும் கடின வேலைக்குத்

தயாராக இருக்கக் கடமைப்பட்டுள்ள சேவகரும் குளிர் காலத்தில் உடையினை உடுப்பார்கள் என்றால் செல்வர்களையும் பிறரையும் பற்றிக் கூறுவானேன்?

இங்கே அடியேன் கூறப்போகும் தையல் வேலையின் சிறப்பு இனிமேல்தான் புகுமுகமாகிறது. குளிர்காலத்திற்குரிய ஆடைகள் வெறுஞ் சேலைகளும் சோமன்களும் ஆக அமையா. ஆடு, மான், புலி, சிங்கம், கரடி, பட்டுப்பூச்சி ஆய பிறவற்றின் மயிரிழைகளைக்கொண்டும், பஞ்சின் தடித்த நூலைக்கொண்டும் செய்த ஆடைகளை ஆண் பெண் ஆய இருதிறத்தார்க்கும் சிறுவர் முதியர் ஆயவர்களின் உடல் நிலைக்கேற்பத் தைத்து அணிய வேண்டியே இருக்கிறது. குளிர்காலத்திற்குரிய கம்பளம் போன்றவையும் தைத்திருக்க வேண்டும் என்பது உள்ளடங்கிய மற்றோர் செய்தியாம். தையற்றொழிலாளர்கள் அப்பழைய காலத்தே ஆடு, கரடி முதலிய மயிரிழைகளைக்கொண்டு செய்யப்பட்ட துணிகளைத் தைத்துக் கொடுத்திருக்க வேண்டும். இது மறுத்தற்கில்லை. மேலும் 'கட்டு'' என்ற சொல்லுக்கு ''காவல்'' ''உறுதி'' என்ற பொருள்களும் உண்டு. எனவே அவற்றைக் கொண்டு காவல் செய்வோர்களான அரசர் முதல் சேவகர்வரையிலும் குளிர்காலத்தில் தையற்றொழிலாளர்களின் திறம்பட்ட வேலையினால் தங்கள் தங்கட்கு வேண்டிய உடுப்புக்கள் தைத்து அணிந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. அதனால் தையற்றொழிலின் பல்வேறு நுட்பதிட்ப வேலைப்பகுதிகளும் வெளியாகின்றன. பொத்தான் தைத்தல், கோட்டு, சொக்காய், காலணி, இடுப்பணி, மாரணி, கழுத்துப்பட்டை, தலையணி முதலிய பல வகைகளில் தைத்துக்கொடுக்கும் வேலை சீரிய முறையில் நடைபெற்றிருக்க வேண்டும். அத்தொழிலே, வாழையடி வாழையாக உலகெங்கணும் பரவியும் இருக்க வேண்டும். இனி ''கட்டு'' என்ற சொல்லுக்குற்ற ''உறுதி'' என்ற சொல்லைக் கொண்டு ஆண்டு நிலவிய தையற்றொழில், தற்போது சில நய வஞ்சகர்கள் செய்யும் மோசடித் தையல்போல் அல்லாது, மிக்க உறுதிப்பாட்டுடன் நம்பிக்கை தரக்கூடிய அளவுக்கு இருந்திருக்க வேண்டும் என்று புலப்படுகிறது. அவ்வாறு எளியவர்முதல் செல்வர் ஈறுகவுள்ள மக்கள் தொகுதிக்கு வேண்டிய உடைகளைத்

தைத்துக் கொடுப்பதில் "உறுதியும்" உழைப்பும் காட்டி யிருப்பரேல், அத்தையற்றொழிலாளர்கள் எல்லாம் கல்வி கேள்வி களில் பலரும் போற்றக்கூடிய அளவுக்குப் புலமைப் பெற்றிருக்க வேண்டும் என்றுகூட தொனிக்கிறது எனவே "கட்டு" என்ற சொல் தொனிப்பொருளில் வழங்கப்பட்டதாகும். அதனுள் பதிந்துகிடக்கும் பொருளை மேலும் விரிக்க ஆவல் இருந்தும் விரிவஞ்சி விடுத்தேன்.

இனி தையல் தொழிலின் சிறப்பைக்காணச் சிலப்பதிகாரத் திற்குச் செல்வோமாக. அந்திமாலைச் சிறப்புச் செய்காதையில் 48-வது அடியை இங்கே காண்போமாக. அதாவது :– "மென் துகில் அல்குல் மேகலை நீங்க" என்பதாம். அதனை அன்வயப் படுத்தின், "மென்துகில் மேகலை அல்குல் நீங்க" என்று வரும். "மேகலை" என்ற சொல்லை நான் கையாள விரும்புகிறேன். அச்சொல்லுக்கு "இடையணி வகை" என்ற பொருள் தரப் பட்டுள்ளது. அதாவது பெண்கள் இடையில் பாவாடை முதலிய பலதிறத்த உறைகளை அணிவர். அவற்றிற்கெல்லாம் பொதுப் பெயர் "மேகலை" என்க.

நாம் இல்லற வாசிகள் நமது மனைவியரும் பெண்மக்களும் நமது இல்லங்களில் நவீன முறைப்படியோ அன்றி பழமைப் பட்டோ என்னென்ன அணிகின்றார்கள் என்பதை நாம் அறி வம். குளிக்கும்போதும், சர்க்கஸில் ஆடும்போதும், நடன காலத்தும், பிற வேளைகளிலும் அவர்கள் இடுப்பில் ஏதேனும் அணிவர். அவ்வாடைகளை ஒவ்வொன்றாக நோக்குவோமானால் எல்லாம் தையற்றொழிலில் ஈடுபட்டிருத்தலைக் காண்பம். தைக் காமல் ஒன்றுகூட இருக்காது. அதிலும் அவர்கள் எப்போதும் மெல்லிய துணிகளையே பெரிதும் விரும்புவர். அதனாற்றான் "மென்துகில் மேகலை" என்ற சொற்றொடர் தரப்பட்டுள்ளது. மெல்லிய பல்வேறு நிறமுள்ள துணிகளால் தைக்கப்பட்ட இடை யணி (இடுப்பில் அணியப்படுகின்ற) வகைகள் என்றது பொருள் எனவே அவையனைத்தும் தைத்த பின்னரே உபயோகத்திற்கு இருந்து வரும். இதைக்கொண்டு என்ன ஊகிக்க வேண்டும் என்றால் அக்காலத்துப் பெண்களின் இடையணி வகைகளையும்

தைக்கும் தொழில் நிலவிற்று என்பதே. தையல் தொழிலின் எப்பகுதியினையும் நமது முன்னோர்கள் கற்காமலும் பழக்கத்தில் கொண்டுவராமலும் சென்றிலர். இனி நான் கூறப்போவதும் தையல் தொழிலின் சிறப்பினைப்பற்றியதே. அது முரட்டுத் துணிகளைத் தைக்கும் ஆற்றலும் அப்போது இருந்தது என்பதை நன்கு எடுத்துக்காட்டும்.

சிலப்பதிகாரத்தில் அரங்கேற்று காதையில் "எழினி" என்ற சொல்லை நாம் படிக்கிறோம். "எழினி" என்றால் "திரை" என்பது பொருள். திரையில் பலவகை உண்டு. அவற்றுள் மூன்றைப் பற்றியே இங்கே கூறப்பட்டுளது.

அவை:— (1) ஒருமுக எழினி (2) பொருமுக எழினி (3) கரந்து வரல் எழினி.

நாடக அறிவும், நாடக மேடை அமைக்கும் அறிவும் ஒருங்கே வரப்பெற்றவர்கட்கு (1) ஒருமுக எழினி, (2) பொருமுக எழினி (3) கரந்து வரல் எழினி என்பனவற்றின் நிறம், தன்மை, அளவு முதலிய பண்புகள் நன்கு தெரியும். அடியேனுக்குத் தெரிந்த வகையிலும், கேட்டுத் தெளிந்த வகையிலும் இங்கே விவரிக்கின்றேன். மேலும் கூற விரும்புவோர்கள் அங்ஙனமே கூறின் இக் கட்டுரை மிகவும் சிறக்கும் என்பதில் யாதொரு ஐயமும் இல்லை என்க. ஒருமுக எழினியே நடிப்பிடத்தின் முதற்றிரையாம். அதன் முன் பக்கத்தில் நடிப்பின் பெயரும் அதன் முக்கிய உயிர் நாடியான (தலைவன், தலைவி) நடிகர்களின் பெயரும் உருவமும் தீட்டப்பட்டிருக்குமாம். வேறுபல வண்ணங்களும் அத்திரையை அணிபெறச் செய்யும். அவ்வெழினியைப் பார்த்த அளவில் அன்று நடைபெறும் ஆட்டத்தின் பெயரையும் அதன் போக்கையும் நன்கு உணரவும் ஊகிக்கவும் இடங்கிடைக்கும்.

பொருமுக எழினி இரண்டு கூறாய் அமைந்து நடுத்திரையாக விடப்படுவதாம். ஒரு பத்தியில் தலைவி அல்லது தலைமகனின் எதிரிகளின் சூழ்ச்சி, பகை முதலிய தீய பண்புகளைக் காட்டும் ஓவியங்களும், மற்றொன்றில் தலைவி அல்லது தலை

மகனின் மெய்ப்பாட்டியல்களும், சோதனைகளைத் தாங்கும் சின்னங்களும், பிறவும் அமைந்திருக்குமாம். எனவே ஒரு பகுதியில் காணப்படும் சித்திரங்களின் உட்பொருள் மற்றொன்றில் காணப்படும் ஓவியங்களின் உட்பொருளோடு முரண்படுமாம். அதனாலே அத்திரைக்கு "பொருமுக எழினி" என்ற பெயரும் தரப்பட்டதாம். இன்னும் இவ்வாறு புனைந்தும் வனைந்தும் கூறப்படும் கற்பனா சக்திகள் நிறைந்த கருத்துக்கள் யாவும் இங்கே வரவேற்கத் தக்கனவே.

"கரந்துவரல் எழினி" என்பது கடைசியாகவோ அல்லது நினைத்த இடத்திலோ அமைக்கப்பட்டிருப்பது. அதில் நடிப்பவர்கள் தங்கள் தங்கள் "அணிசெய் அறைகளி"லிருந்து இருபக்கங்களிலும் சிறிது தூரம் பொதுமக்களுக்குத் தெரியாமலே வரலாம். அங்கங்கே அத்திரையில் துவாரங்கள் இருக்குமாம். அவற்றின்மூலம் நாடக அரங்கின் முற்பகுதியில் எந்தெந்த நாட்டு மன்னர்கள், அமைச்சர்கள் பெரியவர்கள் இன்னன பிறர் அமர்ந்திருக்கிறார்கள் என்பதைக் கண்டுகொள்ள முடியுமாம். அதற்கேற்றவாறு அவரவர்களை மகிழ்வூட்டும் பொருட்டு மிக்க ஆவேசங்கொண்டோ, அதிவீரங்கொண்டோ, தாங்கற்கரிய நகைச்சுவையுடனோ, திடீரென நடிப்பவை முன்தோன்ற ஏதுவாகுமாம். அதனால்தான் "கரந்துவரல் எழினி" என அத்திரைக்குக் காரணப்பெயரும் வந்ததாம். எதுவாயினும் இம்மூன்று திரைகளும் மரப்பலகை, காகிதம், பசை, முரட்டுத் துணி (படுதா) ஆயவற்றால் ஆனதே. முரட்டுத் துணிகளை சிறுபெரு அளவுகளாக வெட்டி; வண்ணமிட்டுத் தைத்தாக வேண்டும். தைத்த பிறகும் வண்ணமிட்டிருக்கலாம். எப்படியும் இத்திரைகள் பெரும் முரட்டுத் துணிகளால் நல்ல முறையில், நீண்டநேர வேலைப்பாடு கொண்ட தையலால் ஆனவை என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். தையற்றொழிலின் உயர்வினை அறிவிக்க இது ஒரு பெருஞ்சான்றாகும். இன்னும் ஒன்று அடியேன் ஊகிக்கின்றேன். திறந்த வெளியில் வனம், பூங்கா, நீர்நிலை, மலைவெளி முதலிய இடங்களில் முகாம்செய்து ஆடையின்றி ஆடும் பழக்கம் நமது முன்னோர்களிடம் இருந்ததாக அடியேனுக்குத் தெரியவில்லை. கற்றது கைம்மண்ணளவு. அதனால் இன்னும் படிக்க

வேண்டிய பகுதிகள் பல இருத்தலின் எனது கூற்று நல்ல ஆதாரத்தோடு அமையாமல் இருக்கலாம்; அவர்கள் பொறுப்பார்களாக. குறிஞ்சி நிலத்துங்கூட தலைவியும் தலைவனும் கள்ளப் புணர்ச்சி விழையுங்காலை, தோழி வாயிலாகவும், ஊர் அலர் வாயிலாகவும் நாம் அறிவதிலிருந்தும் நமது முன்னோர்கள் "ஆடையின்றி" புனத்தும், வனத்தும், பூங்காவிலும், மலை வெளியிலும்" ஆடியதாக நாம் அறியவில்லை.

ஆனால் மேனாட்டுக் கலைகளில் பி. ஏ., எம். ஏ., முதலிய வகுப்புகளுக்குற்ற பாடப் பகுதிகளில் நாம் அந்நாட்டினர் பலர் ஆணும் பெண்ணும் கலந்து அவ்வாறு ஆடையின்றி ஆடியதாகப் படிக்கிறோம். சினிமாவிலும் பார்க்கிறோம். பாரிஸ் முதலிய அயல் நாடுகளில் இன்றும் அவ்வாறே மக்கள் ஆடிக்களித்தயர்கின்றனர். அத்தொத்து நோய் நமது இந்திய மாநிலப் பரப்பில் சோஷலிஸபாணியில் வருங்கால இந்தியாவை அமைக்கவேண்டும் என்று அல்லும் பகலும் ஓயாது உழைக்கும் சில பல பெரிய குடும்பங்களில் புகுந்து வருகிறது. இதை நேரில்கண்ட என் மனம் இன்னும் அமைதி அடையவில்லை. இவை எல்லாம் ஏன் இங்கே கூறுகின்றேன் என்றால் தையல் தொழிலின் அறிவு வளர்ச்சி நமது பண்டைத் தாயகத்திருந்தே இப்போதுள்ள நாடுகள் எங்கும் சென்றிருக்க வேண்டும் என்பதற்கே. நமது முன்னோர்கள் மட்டும் மூவகை எழினிகளைத் தைத்து ஆடக அரங்கினை அமைத்து ஆடிய அக்காலத்தில் இதர நாட்டு மக்களுக்கும் அத்தொழில் தெரிந்திருந்தால் வெட்கக்கேடான "திறந்த வெளியில் கழன்ற உடம்புடனேவா ஆடிக்களித்திருப்பர்? இயற்கையின் குளிர், வெப்ப நிலைகளை உணரும்போது கூட அத்தகைய அவல ஆட்டங்கட்கு இடமில்லை என்று எண்பிக்க முடியும். மேலும் அணுவை ஆய்ந்தவர்கள். இயந்திரங்களைக் கண்டுபிடித்தவர்கள். இன்னும் பல்வேறு விஞ்ஞானப் பெரியவர்கள் வாழ்ந்த அம்மேனாட்டு மக்களின் முன்னோர்கள் அவ்வாறு செய்திருக்க மாட்டார்கள் என்பதே எனது தீர்ந்த முடிபு. எனவே தையற்றொழிற் கதிரவன் இங்கிருந்தே தோன்றியிருக்க வேண்டும்.

(தொடரும்)

சென்ற இதழின் தொடர்ச்சி

"முழக்கம்"

[வரலாற்றோவியம்]

கதை—வசனம் "இனியவன்"

காட்சி 10.

இந்திர விழாவிற்குச் சென்று திரும்பிய வளவனையும் வீரர்களையும் நகர மக்கள் தோரணங்கள் கட்டியும், மலர்களைத் தூவியும் சந்தோஷமாக வரவேற்கிறார்கள்.

(கொம்புகளும், தாரைகளும் முழங்க வீரர்கள் அரண்மனையில் நுழைகிறார்கள்.)

வீரன் :— வெற்றி வீரர் வேலழகர் ...

வீரர்கள் :— (எல்லோரும்) வாழ்க!

வீரன் :— இந்திர விழாவின் இணையற்ற வாள் வீரர் ...

வீரர்கள் :— வாழ்க.

காட்சி 11.

(கொல்லிமலை அரண்மனையின் அந்தப்புறம். முல்லை வந்தது தெரிந்து மன்னன் வல்வில்ஓரி வேட்டைக்குச் சென்ற உடையோடு வில் தோளிலே தொங்க வருகிறான்)

ஓரி :— முல்லை! இந்திர விழாவில் அங்கே இன்பம் தரும் காட்சிகளில் என்னென்ன கண்டாய்?

தோழி :— காதற் சுவையிலிருந்து வீரச் சுவை வரை, ஒன்பது சுவைகளையும் இளவரசி சுவைத்து மகிழ்ந்தார்கள்.

ஓரி :— காதற் சுவையா? ... (விளங்காமல் முல்லையைப் பார்க்கிறான். முல்லை தோழியைக் கோபமாக உறுத்துப் பார்க்கிறாள்)

முல்லை :— ஆமாம்! "முறுவல்" என்ற நாடகம் நடந்தது அதில் காதற்சுவை, வீரச்சுவை முதலான ஒன்பது சுவைகளை யும் ஒருங்கே காணமுடிந்தது.

ஓரி :— (வருந்தும் குரலில்) இந்திர விழாவின் இன்பங்களை யெல்லாம் சுவைக்க நான்தான் தவறிவிட்டேன்.

முல்லை :— அப்பா! சோழவள நாட்டைச் சுற்றிப் பார்க்க எனக்கு ஆவலாக இருக்கிறது. நாளை மறுதினம் புறப்படலாம் என்றிருக்கிறேன்.

ஓரி :— அதற்குள்ளாகவா? சில நாட்கள் ஓய்வெடுத்துக் கொண்டதும் போகலாம். நானே தூதுவனை அனுப்பி உன் வருகையை சோழ அரசருக்குத் தெரிவித்து தகுந்த ஏற்பாடுகள் செய்கிறேன்.

முல்லை :— அதெல்லாம் வேண்டாப்பா! கொல்லிமலை நாட் டிலிருந்து செல்லும் கலைஞர்களின் தூதுக் குழுவில் சேர்ந்து கொண்டு செல்கிறேன். அப்பொழுதுதான் எல்லா இடங்களை யும் நன்றாகச் சுற்றிப் பார்க்க முடியும்.

ஓரி :— சென்றுவா! போதுமான உடைகளும், உணவுக்கு வேண்டிய பொருளும் எடுத்துக்கொள். உடல் நலனில் கவன மாக இருக்கவேண்டும். அதோடு தினமும் எனக்குச் செய்தி கள் அனுப்பிக்கொண்டிருக்கவேண்டும்.

முல்லை :— தவறாமல் செய்திகள் அனுப்புகிறேன் அப்பா!

(ஓரி உடைகளைக் களையச் செல்கிறான்)

காட்சி 12.

சோழ அரசனின் சபை. இளஞ்சேட்சென்னியும், இள வரசன் திருமாவளவனும், வீரர்கள் சூழ வீற்றிருக்கிறார்கள். கொல்லிமலை நாட்டின் கலைஞர் குழுவினர் நடனமாடுகிறார்கள். முல்லை நாட்டிய மாதைப்போல் உடையணிந்து, ஒரு காதற்

சுவை ததும்பும் பாட்டிற்கு நடனமாடுகிருள். திருமாவளவன் பாட்டாலும், நாட்டியமாடுவதின் குறிப்பாலும் நாட்டியமாது முல்லை என்று தெரிந்துகொள்கிருன்.

காட்சி 13.

(திருமாவளவன் கொல்லிமலையின் கலைஞர் தூதுக் குழுவினரைக் கலைக் கழகத்திற்கு அழைத்துச் செல்கிருன்)

வள :— (கலைக் குழுவினருக்கு புலவர்களை அறிமுகப் படுத்திவைக்கிருன். நாட்டியமாதாக இருக்கின்ற முல்லையும் மற்றவர்களும் வணங்குகிருர்கள்.

நக்கீரர், பரணர், மாமூலனர், கழாத்தலையர், கபிலர், இடைக்காடனர் (பெண்பாற் புலவர்களை அறிமுகப்படுத்துகிருன்) வெள்ளிவீதியார், காவற்பெண்டு, நக்கண்ணையார், நன்னகையார் பொன்மணியார்,

(யாழ்களை அறிமுகப்படுத்துகிருன்)

பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் இது ஆயிரம் நரம்புகொண்ட ஆதியாழ்.

(முழவுகளை அறிமுகப்படுத்துகிருன்)

அகமுழவு, புறமுழவு, பண்ணமைமுழவு, நாண்முழவு. காலைமுழவு.

(இசை நூல்களை அறிமுகப்படுத்துகிருன்)

இது சிகண்டிமுனிவர் இயற்றிய இசை நுணுக்கம். இது பெருங்குருகு, பெருநாரை.

(நாடக நூல்களை அறிமுகப்படுத்துகிருன்)

குணநூல், கூத்தநூல், சயந்தம், செயிற்றியம், முறுவல், மதிவாணனர் இயற்றிய நாடகத் தமிழ் நூல்.

(கலைக்கூடத்தின் ஒரு பகுதியில் இசையோடு கூடிய நடனம்

நடைபெறுகிறது. வளவனும், கலைக்குழுவினரும் சுவைத்து மகிழ்கிறார்கள்.)

காட்சி 14.

(கொல்லிமலைக் கலைஞர்கள் தங்கியிருக்கும் மண்டபத்தருகே உள்ளப் பூங்காவில் முல்லையை வளவன் சந்திக்கிறான். சேரநாட்டு ஒற்றர்படைத் தலைவன் அத்திமல்லன் அவர்களுக்குத் தெரியாமல் செடியருகில் மறைந்து உரையாடலைக் கேட்கிறான்.)

வள :— (முல்லையைச் சந்திக்க தோட்டச் சுவரின்மேல் ஏறி அதில் அமர்ந்தவண்ணம் கேலியாக...)

முல்லை! என்னைக் கீழே இறக்கிவிடுகிறாயா? குதிக்கப் பயமாக இருக்கிறது.

முல்லை :— கோட்டை மதில்கள் எல்லாம் ஏறிக் குதிக்கக் கற்றுக்கொண்டவருக்கு இந்தச் சிறு சுவற்றிலிருந்து குதிக்கப் பயமாகவா இருக்கும்!...

எனக்குத் தெரியாதா உங்கள் குறும்புத்தனம்? நான் அருகே வந்தால் என்னைத் தூக்கிச் சுவற்றின்மேல் வைத்துவிட்டு நீங்கள் குதித்துவிடலாம் என்றுதானே குதிக்கத் தெரியாதவர் போல் நடிக்கிறீர்கள்!

வள :— (சுவற்றிலிருந்து குதித்து முல்லையருகே வந்து) முல்லை! உனது நுண்மையான அறிவுத்திறன் வெண்மையான பற்களின் வாயிலாக வெளிப்படும்பொழுது...

முல்லை :— என் அழகான உடலுக்கு அழகு செய்கிறதோ?

வள :— அழகா செய்கிறது! உன்னை அள்ளி அணைக்கச் சொல்கிறது. (முல்லையைத் தழுவ நெருங்குகிறான்.)

முல்லை :— (விலகி) அன்பே! அவசரப்படுகிறீர்களே!...... காலம் வரும். காத்திருங்கள்.

வள :— முல்லை! இதோ பார்! உனது சங்குக் கழுத்துக்கு பொங்கும் கடல் தந்த முத்தாரம். (முல்லையின் கழுத்தில் முத்து மாலையை அணிவிக்கிறான். செடியருகே ஒளிந்திருந்த அத்தி மல்லன் மெல்ல நழுவி மறைகிறான். செடி அசைகிறது. வள வனும் முல்லையும் செடி அசைவது கண்டு வியக்கிறார்கள்.)

வள :— என்ன முல்லை பார்க்கிறாய்? செடி அசைகிறதே என்றா?

உன் தந்தக் கழுத்தில் முறுவலிக்கின்ற முத்தாரத்தைக் கொட்ட விழித்துப் பார்த்துக் களித்த கூகை பறந்து சென் றிருக்கும். காதலர்கள் சந்திக்கின்ற இந்தக் கடைச்சாம வேளை யில் வேறுயார் வரப்போகிறார்கள்?

காட்சி 15.

(கொல்லிமலைக் கலைக் குழுவினர் கொல்லிமலைக்குத் திரும் புகையில் சேரநாட்டு ஒற்றர் தலைவன் அத்திமல்லன் வீரர்க ளோடு கள்வர் உடையில் மறைந்திருந்து வழிமறித்துப் பொருள் களைச் சூரையாடி முத்திரை மோதிரத்தைக் கைப்பற்றுகிறான்.)

கள்வர் தலைவன் :— (முல்லையின் பல்லக்கை நெருங்கி) (அத்திமல்லன்)

அஞ்சுகமே! அந்த ஆணிமுத்துமாலையை, சோழ இளவர சனின் அன்பளிப்பை இப்படிக் கொடு. (முல்லை வியப்படைந்து தயங்குகிறாள்) உம்!... (கள்வர் தலைவன் அதட்டுகிறான். முல்லை முத்துமாலையைக் கழற்றித் தருகிறாள்) அந்த மோதிரம்....

முல்லை :— எல்லாவற்றையும் எடுத்துக்கொள். இந்தக் கணை யாழி மட்டும்......

கள்வர் தலைவன் :— எந்தப் பொருளையும் நீ எடுத்துப் போகமுடியாது. (முல்லை வேறு வழியின்றி மோதிரத்தைக் கழற்றித் தருகிறாள். கள்வர்கள் சென்றுவிடுகிறார்கள்.)

முல்லை :— தோழி! முத்துமாலை இளவரசர் தந்த அன்பளிப்பு என்று இவனுக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும்?

தோழி :— ஒற்றனைப்போல் உங்களைச் சுற்றிச்சுற்றி வந்திருப்பானோ?.......... அழகுள்ள பொருள்களுக்கே ஆபத்து அதிகமம்மா? மேலும் பலர் கண்களில் படும்படி அவைகள் உலவிவிட்டாலோ!....

முல்லை :— போதுமடி உன் தத்துவப்பேச்சு. உள்ளம் எரிகின்ற வேளையில் உண்மைகளை அடுக்குகிறாள்.

முத்திரை மோதிரத்தையும் விடாமல் அந்த முரடன் கொண்டுபோய்விட்டான். அதை வைத்துக்கொண்டு என்னென்ன திருவிளையாடல்களை நடத்தப்போகிறானோ?

காட்சி 16.

சேரனின் அரண்மனை, சேரன் பெருஞ்சேரலாதன் உலவிக் கொண்டிருக்கிறான். வீரன் வந்து வணங்குகிறான்)

வீரன் :— மன்னவா! ஒற்றர் படைத் தலைவர் அத்திமல்லர் வந்திருக்கிறார்.

சேரலாதன் :— அழைத்துவா.

அத்திமல்லன் :— மன்னவா! சரியான சந்தர்ப்பம் இந்திர விழாவின் வீர விளையாட்டுக்களில் கலந்துகொண்ட இரண்டாயிரம் சோழ வீரர்களும் சோர்ந்திருக்கிறான்.

மகதச் சிற்பியும் மராடக்கொல்லரும் யவனத் தச்சரும் அமைக்கின்ற அரண்மனை வேலையிலே பதினாறாயிரம் போர் வீரர்கள் பணியாற்றுகிறார்கள்.

சோழ இளவரசன் திருமாவளவனின் தலைமையில் காவிரிக்குக் கல்லணை எடுக்க ஏழாயிரம் வீரர்கள் சென்றிருக்கிறார்கள்.

அதோடு சோழரின் முடிகவிழ தேவையான முத்திரை மோதிரமும் கொண்டுவந்திருக்கிறேன். இதன் உதவியால் எதிரியின் கோட்டைக்குள்ளே எளிதில் புகுந்துவிடலாம்.

(புலி இலச்சினைப் பொறித்த முத்திரை மோதிரத்தைப் பெருஞ்சேரலாதனிடம் கொடுத்து)

இது சோழ இளவரசன் கொல்லிமலை இளவரசிக்குக் காதற் பரிசாகத் தந்த கணையாழி.

சேரலாதன் :— அத்திமல்லரே! உமது அரிய சாதனைக்கு உரிய பொருள் எது வேண்டுமானாலும் தருகிறேன். கேளும்.

அத்திமல்லன் :— மன்னர் மன்னா! தங்கள் அன்பும், அருளும் இருக்கும்பொழுது எனக்குப் பொன்னும் பொருளும் எதற்கு?

சேரலாதன் :— ஒற்றர் தலைவரே! ஒப்பற்ற வீரரே! உம்மைப்போன்ற உண்மை ஊழியர்கள் இருக்கும்பொழுது.

"இமயம் முதல் குமரிவரை ஒரு குடைக்கீழ் ஆளவேண்டும்" என்ற என் எண்ணம் ஈடேறாமல் போகுமா?

(அத்திமல்லனைத் தழுவிக்கொள்கிறான்)

அத்திமல்லன் :— மன்னவா! இப்பொழுதே வேளிர் குல வீரர்களும், பாண்டிய நாட்டுப் படைகளும் வாகைப்பறந்தலையில் பாசறை அமைக்குமாறு திருமுகம் அனுப்புங்கள். நான் ஒற்றர் படையோடு உறையூர் சென்று உளவறிந்து வருகிறேன்.

சேரலாதன் :— இப்பொழுதே அனுப்புகிறேன்.

(சேரலாதன், பாண்டியனுக்கும், வேளிர்குலத் தலைவனுக்கும் ஓலை எழுதி குதிரை வீரர்களை அனுப்பிவைக்கிறான்.

காட்சி 17.

(சேரன் பெருஞ்சேரலாதன் கொடுக்கும் திருமுகத்தைப் பாண்டிய மன்னனிடம் (அரச சபையில்) கொடுக்கிறான் சேர நாட்டுத் தூதுவன்)

பாண்டிய மன்னன் :— (திருமுகத்தைத் தூதுவனிடம் இருந்து வாங்கிப் படிக்கிறான்.

[“ஒப்பந்தப்படி, சோழ நாட்டின் காவிரிக் கரையோரப் பகுதிகளையும் உறையூரையும் எடுத்துக்கொள்ளலாம். காலம் தாழ்த்தாது வாகைப் பறந்தலையில் பாசறை அமைக்கவும்”

“சேரன் பெருஞ்சேரலாதன்”]

சேனாதிபதி! முரசு முழங்கட்டும். தாரைகைகள் ஆர்ப்பரிக் கட்டும். போர்ச் சங்கு முழங்க புறப்படட்டும் நம் படைகள்.

காட்சி 18.

(வேளிர்குலப்படைத் தலைவன் மலைச்சாரலில் வீரர்கள் சூழ அமர்ந்திருக்கிறான். சேர நாட்டுத் தூதுவன் சேரலாதன் தந்த திருமுகத்தை வேளிர்குலப் படைத் தலைவனிடம் கொடுக்கிறான்)

வேளிர்குலப்படைத் தலைவன் :— சேரலாதனின் திருமுகத்தைப் படிக்கிறான்) [“சோழர்களைப் புறங்காண வாகைப் பறந்தலையில் பாண்டியரோடு பாசறை அமைக்கவும். ஒப்பந்தப்படி காவிரிப்பூம்பட்டினக் கடற்கரையோரப் பகுதிகளை எடுத்துக் கொள்ளலாம்”

‘சேரன் பெருஞ்சேரலாதன்’]

வீரர்களே! புறப்படுங்கள். புலிக்கொடியாரைப் போர்க் களத்தில் புறங்காணுவோம். பொன் கொழிக்கும் சோழ நாட்டைச் சூறையாடுவோம்.

காட்சி 19.

(சோழன் இளஞ்சேட்சென்னியின் அரச சபை. சோழ ஒற்றன் ஒருவன் விலாவில் தைத்த அம்போடு உள்ளே நுழைகிறான்)

ஒற்றன் :— மன்னவா! சேரனும், பாண்டியனும் படை வீரர்களோடு வாகைப் பறந்தலையில் பாசறை அமைத்திருக்கிறார்கள். நாளை மறுதினம் சோழ நாட்டின்மீது போர் தொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். அதற்குள் நாம் போர் தொடுத்து அவர்களை முறியடிக்கவேண்டும். (ஒற்றன் மூர்ச்சித்து விழுகிறான். வீரர்கள் இருவர் அவனைத் தூக்கிச் செல்கிறார்கள்)

(தொடரும்)

சென்ற இதழின் தொடர்ச்சி.

புயல்.

ஆசிரியர்: **செகப்பிரியர்.**

மொழி பெயர்ப்பாளர்: **புலவர். R. ஏகாம்பரநாதன்.**

அங்கம்—2. களம்—2.

(தீவின் மற்றொருபுறம்—கலியன் விறகுக்கட்டுடன் வருதல்)

கலியன்:—இடுகாடு, சாக்கடை, சதுப்பு நிலம் இங்கு மலியும் நோய் அணுக்களைப் பகலவன் ஒளியும் சூடும் ஒழிக்கக் கூடாது. அதற்கு மாறாக எல்லா நோய்க் கிருமிகளும் எனது தலைவன் உடம்பில் போய்க் குவிக்கப்படல் வேண்டும். அவை அவனது உடலின் கணுக்களிலும் இரத்தக் குழாய்களிலும் தங்கிக்கொண்டு துன்புறுத்தல் வேண்டும். எனது சாபத்தினை-பேச்சினை-நினைப்பினை யெல்லாம் அவனுடைய காத்துக்கணங்கள் தெரிந்துகொண்டு அவனிடம் சொன்னால் என்ன செய்வது? சொன்னால்தான் சொல்லட்டுமே. என் வயிற்றெரிச்சல் அவனை விடாது. எனது சாபம் பலிக்கும். என் பக்கம் நியாயம் இருக்கும்போது இவனுக்காக இவன் பேச்சைக்கேட்டுக் காத்துக் கணங்கள் எனக்குத் துன்பம் செய்யா. அவனது ஏவலால் இது வரை அவனது கணங்கள் குரங்குகள்போல்வந்து பல்லைக்காட்டிப் பயமுறுத்தியதும், பாம்புபோல் வந்து கௌவியதும், ஆந்தை போல் வந்து அலறியதும் நினைக்கும்போதே நடுக்கம் உண்டாகின்றது. அவன் இன்னும் என்னை என்னென்னசெய்ய எண்ணியிருக்கிறானோ?—இதோ. இதோ அவனது ஏவலால் வரும் ஆளே தான். நான் விறகு கொண்டுவர நாழியாகிவிட்டதென்று கசையடி கொடுக்க வருகிறான்போல் இருக்கிறது. சரி—மண்ணோடு மண்ணாய்ப் பூமியில் விழுந்துகிடந்தால் இவன் நம்மைக் கவனிக்க மாட்டான். (கட்டையைப் போட்டுவிட்டுப் பூமியில் விழுந்து கிடக்கிறான் கலியன்; திருக்கு வருகிறான்)

திருக்கு :—காத்து அடிக்குது. சத்தம் அதிகம் ஆகிறது புயல் சுமர்கிறது. ஒண்ட இடமில்லை. மழையே தலைக்குமேல் போய் விடு. எங்கே போகப்போறே. நன்றாய் வயிறு வெடிக்கக் குடிச்சுட்டு வருகிற நீ சும்மாவா போவே. இடிகூட உண்டாகும் போலத் தோணுதே—அந்த இடி என் தலையில் விழுந்தால்—தலையில் தான் விழும். (கலியன்மேல் தன் கால் தடுமாறி கீழே விழுந்து எழுகிறான்) இதென்ன? மனிதனா? மீனா? இரண்டும் கலந்தமாதிரியல்லவா இருக்கிறது! செத்து ஒரு வாரம் கழித்திருக்கும்போல் தோன்றுகிறதே. என்ன நாற்றம்? இதை யார் கவனிப்பார். ஒரு வாசம் போட்டு மறைத்து விடலாம். இந்த மாதிரி ஒரு அதிசயப் பிறவியுடன் நான் என் ஊரில் சிலநாள் தங்கினால் பெரிய பணக்காரனாய்விடுவேன். காலணா பிச்சை போடாதவன்கூட இதைப்பார்க்க ஒருரூபாய் டிக்கெட் வாங்கிவிடுவான். எவ்வளவுபணம் சம்பாதிக்கலாம். இது என்னை ஒரு பணக்காரனாய்ச் செல்வாக்குள்ளவனாகக் கைதூக்கி விட்டுவிடுமே. ஏ! அதிசயப் பிராணியே! உனக்கு இங்கு மதிப்பில்லையே உனக்குக் கால், கை எல்லாம் இருக்கே. மீன் மாதிரியும் இருக்கிறாயே இந்தத் தீவு ஆறுமீன் இப்படித்தான் இருக்குமோ? இடி, இடிச் சத்தம் தொடர்ந்துவிட்டது. ஒரு புயல் வருகிறது நான் இந்தப் பிராணிக்கும் கீழே ஒளிந்துகொள்வேன். இப்பிராணிதான் எனக்குப் போர்வை. மண்தான் எனது படுக்கை. எனது துன்பத்தை நீக்கிக்கொள்வதற்கு இப்படுக்கையும் போர்வையும் போதும். படுக்கையும் போர்வையுமே பலருக்குத் துன்பத்தை உண்டாக்கியும் இருக்கின்றன. படுக்கையின் இரகசியத்தை அறிந்தவர் யார்? நமக்கு இது அருமையாகத்தான் கிடைத்திருக்கிறது. புயல் விடும் வரை இங்கு அறிதுயில் கொள்வோம்.

(கள் புட்டியுடன் கணேசன் வருதல்)

கணேசன் :—இனிமேல் கடலுக்குப் போகமாட்டேன். அவ்வளவு தண்ணியில்போய் யார் சாவது? கரையிலேயேசாவதுதான் நல்லது. இதென்ன! இங்கே தெரிவது பேயா, பிசாசா? இல்லே இத்தீவு ஆறுத்தானா? இதெற்கெல்லாம் நான் பயப்படமாட்டேன்

என்னிடத்தில் மருந்து தயாராக இருக்கிறது. உனக்கு நாலு கால் இருப்பதற்காக நான் பயப்படமாட்டேன். தண்ணீரிலேயே சாகாமல் வந்தவன் உனக்குப் பயப்பட்டா சாவான்? நாலுகால் பிராணி எப்போதும் இருகால் பிராணிக்கு வாகனமாகும். நான் மூக்கால் மூச்சுவிடும் வரை சாக மாட்டேன். அப்போது என்னை ஒருவரும் பயந்தவன் என்று கூறவும் மாட்டார்கள்.

கலியன் :—ஐயோ, கீழேயிருந்து அந்தக் காத்தவன் என்னை என்னென்னவோ படுத்திவைக்கிறானே?

கணேசன் :—இதில் ஏதோ இரகசியம் இருக்கிறது! இப் பிராணி இத்தீவின் கருப்பொருள்போல் இருக்கிறது. நான்கு கால்கள். பாதி மனிதன். பாதி மீன். ஆனால் நமது மொழியைப் பேசுகிறதே! இந்த மருந்தை ஊற்றிக் குளிரைப் போக்கி விட்டால் நம்மோடு பேசும். நமது ஆளாக வைத்துக்கொண்டு நாகைக்கும் கொண்டுபோகலாம். இதைக் கொஞ்சம் குடி. (கலியன் வாயில் ஊற்றுகிறான் கள்ளை)

கலியன் :—என்னைத் துன்புறுத்தாதே. இனிமேல் நான் விறகைக் காலாகாலத்தில் கொண்டுவந்து ஒழுங்காக வேலை செய்வேன். நான் சொன்னதெல்லாம் தப்பு. மன்னித்து விடு.

கணேசன் :—சீ, வா, ஏ பூனை, இந்தா, இதைக்குடி, மொழி ஞானம் உண்டாகும். வாயைத் திற நான் உன் எதிரி அல்ல; நண்பன். உன்னைக்கொண்டுபோய் அதிகமான விலைக்கு விற்றுப் பணக்காரனாகப் போகிறேன். உன்னை நம்பியுள்ளவன் நான். சீக்கிரம் வாயைத் திற.

திருக்கு :—அது நமக்குத் தெரிந்த குரல்—நண்பன்—நண்பன் குரல்—அது எப்படி யிருக்க முடியும்? அவன்தான் கடலில் முழுகிப்போய்விட்டானே. ஆமா. அவனது ஆவி, பிசாசு, கடவுளே, என்னைக் காப்பாற்று!

கணேசன் :—இதென்னடா, இது நல்ல தீவுடா!, இரண்டு குரல் தோன்றுகிறது. நா லு கா ல். இரண்டு குரல். கீழ்ப் பக்கத்துக் குரல் என்னை நண்பன் என்று கூறுகிறது. மேற்

பக்கத்துக் குரல் வேறென்னவோ கூறுகிறது. ஒவ்வொன்றையும் உற்றுப் பார்த்தால் அங்கங்கே என்னென்னவோ புதுமைகள் எல்லாம் காணும்போலத்தான் தோன்றுகிறது. இந்தா, இன்னும் கொஞ்சம் குடி, தாராளமாகப் பேசு.

திருக்கு :—க, க, கணேசா, நீ தானுடா?

கணேசன் :— குடிக்காத வாயிலிருந்துடா நல்ல பேச்சு வருது. இது விசித்திரப் பிராணியல்ல; பேய்தான்!

திருக்கு :—இல்லே. நான் பேயல்ல. திருக்கு நான்தான்.

கணேசன் :—திருக்குன்னு வாடா வெளியில். இந்த நான்கு கால்களில் எந்தக் காலுடா உன்னது ? இந்தக் குட்டைக் கால்கள் தானே! (வெளியே இழுக்கிறுன்) அடே திருக்குத்தாண்டா நீ? இந்த மச்சாவதாரத்துடன் எப்படிடா கலந்தாய்? வாயால் விழுங்கிப் பின்னுல் கழித்தானு? என்னடா? சொல் சீக்கிரம்?

திருக்கு:— நான் இடியில் விழுந்து செத்துப் புயலால் மூடப்பட்டதாகவே நினைத்திருக்கிறேன். நீயும் தண்ணீரில் விழுந்து எனக்கு முன்னமேயே செத்துப் போனுய். நீ சாக வில்லையா? புயல் நின்றுவிட்டதா? நாம் இருவரும் ஆவி உலகில் பேசிக்கொண்டிருக்கிறோமா ? நாகை வாசிகளாகத்தான் பேசிக் கொண்டிருக்கிறோமா ?

கலியன் :—அடே, இவன் எவ்வளவு அழகு. அழகா இருக்கிற இவன் தூதனல்ல — கொடுமை செயும் காத்தவன் கும்பலல்ல. இவன் ஒரு மனிதன்தான். ஐயா, வணங்குகிறேன்.

கணேசன் :—ஏ, கருவாடு, (கலியனே) உனக்கு உடம்பு எப்படிடா இருக்கு? நடுக்கமில்லேயே?

கலியன் :—இல்லிங்க- நீங்க எங்கேயிருந்து இப்படி வந்தீங்க ஆகாயத்திலிருந்து குதித்தீர்களா?

கணேசன் :—நான் சந்திர மண்டலத்திலிருந்து வந்தவன்.

அந்தக் காலத்தில் சந்திர மண்டலத்தில் நான்தான் மனிதனுக இருந்தவன். அது அந்தக் காலம்.

கலியன் :—நான் அப்பவே உன்னைப் பார்த்திருக்கிறேன். ஆனுல் வணங்கினது இல்லை. அதுதான் இப்போது என் தலைவி, வட்டமான நிலவைக் காட்டி, உன்னைப் பார்க்கச் சொன்னுள். அப்போது பக்கத்தில் உன் நாய்—ஒரு புதர் இரண்டும் இருப்ப தையும்கூடக் காட்டினுள். அவையெல்லாம் எனக்கு இப்போது ஞாபகம் வருகிறது.

திருக்கு :— ஏ, கணேசா, இது சரியான முட்டாள் பிராணிடா! நீயோ சந்திரனில் இருக்கும் பயித்தியக்காரன் என்று அவனுலேயே மெய்ப்பிக்கப்பட்டாய். முட்டாள் பிராணி எதையும் நம்பும்! ஏ, பிராணி! உன் பெயர் என்ன?

கலியன் :—என் பெயர்தான் கலியன். (கணேசன் காலில் விழுந்து) இத்தீவு முழுதும் உனக்குக் காட்டுவேன். குடிக்க நல்ல நீர்ச்சுனையைக் காட்டுவேன். நல்ல பழங்கள், மீன்கள் எல்லாம் தருவேன். உமக்கு விறகு கொண்டு வருவேன். அந்தக் கொடுங்கோலனுக்கு ஒன்றும் தரமாட்டேன். எல்லாம் உமக்குத் தான். நான் தொண்டன். நீதான் இனிமேல் எனது தலைவன். எனது அரசன்.

கணேசன் :-சரி, நீ முன்னுலேபோடா கலியா, ஏ, திருக்கு நீ இந்தப் புட்டியைத் தூக்கிக்கொண்டு நடுவேபோடா. அரசனும் செத்தான். நான்தான் இந்தத் தீவுக்கும் எல்லா இடத்துக்கும் தலைவன். உனக்கு நல்ல மந்திரி தருகிறேன் போடா திருக்கு.

திருக்கு :—முட்டாள் கலியன் உன்னைத் தலைவனுக ஆக்கி விட்டான். எனக்கு நீ மந்திரி வேலைதர முடிவு செய்துவிட்டாய். இந்த முட்டாள் நாளைக்கு என்னையும் தலைவனுக்குவான். வேறொருவனுக்கும் அடிமையாகுவான். நான் இதெல்லாம் கொஞ்சமும் நம்பவில்லை. ஏ, கலியா, போடா, வழி காட்டுடா, பசிடா.

கலியன் :-நான் இதோ போறேன். உங்களுக்கு வேண்டிய தெல்லாம் கொண்டுவந்து தருகிறேன். ஆனுல் அவனுக்கு

அந்தக் கொடுங்கோலனுக்கு ஒன்றும் தரமாட்டேன். அவன் பாத்திரங்கள் விளக்கேன். ஊற்று இறைக்க மாட்டேன், விறகு வெட்ட மாட்டேன். வீடு கூட்ட மாட்டேன். எனக்கு-இந்தக் கலியனுக்கு வேறு தலைவன் கிடைத்தான்—நீயும் வேறு ஆளைப் பார்த்துக்கோ.

அங்கம்—3. களம்—1.

(சயசீலன் வீட்டுக்கெதிர்—வீர ராசேந்திரன் விறகுக் கட்டையைச் சுமந்து வருகிருன்.)

வீரராசே:—பெரிய கட்டைகள்தான். கடினமான வேலை தான். ஆனுல் செய்து முடிப்பதில் மிகுந்த மகிழ்ச்சிதான் தோன்றுகிறது. இலேசான தொழிலில் ஏற்படும் மகிழ்ச்சி யினும் கடினமான தொழிலை முடிப்பதில் காணும் மகிழ்ச்சி பெரிதாகத்தான் இருக்கிறது. அரசன் மகனுக்கு அரசாளுவதுதான் குடித் தொழில். கட்டைத் தூக்குவது புன் தொழில் என்று நான் நினைக்கவில்லை. அரசாளுவது பொறுப்பு மிக்கத் தொழிலாக இருக்கலாம். கட்டைத் தூக்குவதில் அவ்வளவு பொறுப்பு இல்லாமல் இருக்கலாம். ஆனுல் அதில் உள்ள கவலையும், விழிப்பும் இதற்கு வேண்டுவதில்லை. இதில் விபத்தும் குறைவு. தொழில் நிலையில் தொழில்களை ஒன்முகக் கூறினும் பயன் நிலையில் பலவகைப்படும். ஒரு தொழிலே இரண்டுவகைப் பலனையும் மேற்கொண்டும் அளிப்பதாகவும் அமையும். இத் தொழில் புன் தொழிலாகக்கருதியே அப்பெண்ணின் தந்தையார் எனக்குத் தந்திருக்கிருர். அவருக்கு இது புன்தொழிலாக இருக்கலாம். எனக்கு இது புனிதத் தொழில். நான் அப்பெண்ணுக்காகச் செய்வது அப்பெண்ணை மனத்துட்கொண்டு அப்பெண்ணின் தந்தையார் காட்டும்-கூறும் தொழில்களையெல்லாம் புனிதமாகவே எண்ணி முடிக்க முனைந்தேன். அப்போது அத்தொழிலின் பலன் என்னளவில் மிக உயர்கிறது. எனது தந்தையார் என்னிடம் ஒப்பித்த ஒரு செங்கோல் ஆட்சித் தொழிலினும்

இத் தொழில் ஒரு புதுப்பலன் தருவதாகவே தோன்றுகிறது. (கட்டையை மாற்றி மறு பக்கம் தோளில் வைத்துக்கொண்டு) இதுபோல் இன்னும் ஒரு ஆயிரம் கட்டைகள் தூக்கிவந்து அடுக்க வேண்டும். இவ்வேலையைக்கண்டு அப்பெண் கண்ணீர் விடு கிறுள். நான் செய்வது என் நிலைமைக்குப் பொருந்தாத இழி தொழிலாக எண்ணி வெம்புகிறுள். இத்தொழில் எனக்குக் கடினமுமல்ல; இழிவானதுமல்ல. விரைவில் செய்து முடிப்பேன். (சயசீலன் பின்னும்—மாலினி முன்னுமாக வருதல்)

மாலினி:— எவ்வளவு கடுமையான வேலை! அந்தக் கட்டைகள்மேல் இடி விழுந்து எரியத் தொடங்கினுல் அவைகள் கூட உமக்காகக் கசிவு காட்டிக்கொண்டே எரியுமே. வேண்டாம். சற்று இளைப்பாருங்கள். என் தகப்பனுர் இப் போது படிப்பில் முனைந்திருக்கிருர். படிப்பில் உட்கார்ந்தால் மூன்று மணி நேரம் அசைய மாட்டார். அதுகாறும் இளைப் பாறலாமல்லவா?

வீரராசே:— பெண்ணே, என் கடமையைத் தொடர்ந்து செய்துகொண்டிருந்தாலே கட்டைகள் முடியுமுன் பொழுது முடிந்துவிடும். இதில் இடையில் வேலையை நிறுத்துவது தகாத காரியம். வினையே ஆடவர்க்குயிர். அதனை நிறுத்துவது எப்படி?

மாலினி:-நான் வேலையை நிறுத்தச் சொல்லவில்லை. வேலை நடக்கும். தாங்கள்தான் வேலையின்றி ஓய்வுகொள்ள வேண்டும். ஓய்வாக இருந்துவரும் நான் அவ்வேலையைநிறுத்தாமல் செய்வே னல்லவா?

வீரராசே:—இது நீ செய்யும் வேலையும் அல்ல. உனக்குத் தந்த வேலையும் அல்ல. எனக்குத் தந்த வேலையை நான் வாளா விருக்க நீ செய்வது தகுதியும் அல்ல.

மாலினி:— நான் பிறப்பால் பெண்பால்தான். ஆனுல் தொழில் ஆணுகவோ, பெண்ணுகவோ பிறக்கவில்லை. சமதருமம் பழகிய நாக்குச் சனுதனத்தையும் மறக்கவில்லைபோலும்! இத் தொழில் நான் செய்யலாம். எனக்குச் செய்து பழக்கமும் உண்டு.

அன்றியும் தாங்கள் பிறாது கட்டளையைக் கடமையாகக்கொண்டு செய்கிறீர்கள். நானோ, எனது விருப்பத்துக்கு விளையாட்டாகச் செய்ய எண்ணுகிறேன். உரிமையுடன் செய்வதாயினும் எனக்கு மிகவும் மகிழ்வளிப்பதேயாகும். தாங்கள் தடுக்க வேண்டாம். நானே செய்கிறேன் ; அல்லது நானும் செய்கிறேன்.

சயசீலன் :— மாலினி, உனக்கென்ன பித்தம் தலைக்கேறி விட்டதா? அவன் கட்டையைத் தூக்கி அடுக்கினால் உனக் கென்ன? அவன் தொழிலில் நீ இனித் தலையிடாதே. நான் விரைவில் திரும்பி வருவேன். கவனமாக நடந்துகொள்.

வீரராசே :—பெண்ணே, எனக்கு களைப்பென்பதே தோன் றுது. நீ அருகில் இருக்கும்போது வேலை விரைவில் முடிந்து விடும். உன் பார்வைச் சக்தியே நான் பல வீரராசேந்திரனாக வேலையை முடித்து வைக்கின்றது. அழகுத் தெய்வமே உனக்கு நின் தந்தையார் இட்ட பெயர் என்ன? என் பெயருடன் அதனை யும் இணைத்து வழிபாடு செய்ய என் உள்ளம் விரும்புகிறது.

மாலினி :— என் பெயர் மாலினி. (தந்தை வருவதைப் பார்த்து) அப்பா ! என்னைப் பொறுத்தருள வேண்டுகின்றேன். என் பெயர் மாலினி என்று கூறிவிட்டேன். அது ஒருவேளை தங்கள் கட்டளையை நான் மீறியதாக இருக்குமோ என்று அஞ்சு கிறேன்.

சயசீலன் :—அச்சம் வேண்டாம்; அவசரமும் வேண்டாம். விரைவில் மீள்வேன். இங்கேயே இரு மாலினி.

மாலினி :— தந்தையார் என்னவோ வேலையாக முனைந்து திரிகிறார். என் பெயர் எதற்கு?

(தொடரும்)

சென்ற இதழின் தொடர்ச்சி.

பாரி.

ச. பாலசுந்தரம்.

காட்சி 3.

[வைகறை கண்ட முத்துப் புலவர் படுக்கையிலிருந்து கொண்டே]

புலவர் : கல்வியின் தெளிவினைக் காணக் காணச்
செல்வுறும் மடமைபோல் செங்கதி ரோன்தேர்
புறப்படத் தேயும் பொங்கிருள், அதனால்
இருட்படாம் போர்த்த இயற்கையாம் அன்னைதன்
அருட்டிரு முகத்தினை ஆருயிர் நோக்கி
விரித்திடு கின்றாள்; வெள்ளியும் மறைந்தது
சுனையிடைச் சென்று புனல்வழி படிந்து
நனைமலர்த் தென்கால் நன்கனம் புணர்ந்து
செங்கதிர் மூழ்கிச் சிந்தனை விரித்து
நங்கடன் முடிப்போம் ... ...

[அப்பொழுது புலவர் மனைவி எழுந்து கணவனைத்தொழுது]

மனைவி : [தனக்குள்ளே] ... ... நள்ளிருள் கழிந்ததோ?
ஆம்ஆம் வாரணம் அஞ்சிற கசைய
ஓம்ஓம் என்றன ஒண்கதிர்ச் செல்வன்
பொருளுடை யோரெலாம் பொலிவுடன் ஏத்தப்
பொருளிலா ரெல்லாம் பொலிவிழந் தேங்க
இன்பக் கதிரினில் துன்பமும் தோய்த்து
மன்பதை புகழும் மாட்சியின் மிக்க
குணபால் தோன்றும் குறிக்கோ ளுடையன்
ஆரிருள் கழிந்தது அடிகளே எழுமின்
சீரார் திருவடிச் செம்மலர் போற்றுதும்

புலவர் : நன்று நன்றென் நலமார் நங்காய்
குன்றுசூழ் சுனையிடைச் சென்றுகடன் முடித்து
வருவேன் விரைவில் ... ...

மனைவி : .... வருக. வணக்கம்.

[காலைக் கடன்களை முடித்து நீராடிவிட்டுப் புலவர் கதிரவன் வணக்கம் செய்கிறார்.]

புலவர் : தங்கப் பிழம்போ! தாரகைப் பெருக்கோ!
பங்கமில் ஓவியன் பாங்குறத் தீட்டிய
எழிலார் படமோ! இன்பத் திரளோ!
பிழியா அமுதப் பிழம்போ! வானின்
பேரொளி திரண்ட பெருக்கமோ! அறிஞர்
சீரிய மனத்தின் செம்மைசேர் உருவோ?
யாதென அறியேன் தீதுடை மனத்துள்
கோதிருள் போலக் குவலயம் சூழ்ந்த
காரிருள் கெடுப்பான் சீரிய வேந்தோ!
கங்குற் பகைவன் கையகப் பட்ட
பொங்குபல் உயிரெலாம் புத்துயிர் கொள்ளக்
கதிர்முகம் விரித்து எதிரியை மாய்க்கும்
சதிர்புரி அரசோ! சகமெலாம் விளக்கச்
சுடரும் விளக்கோ! சூழ்கடல் உலகம்
இடரினைக் களைய இன்முகங் காட்டும்
இயற்கையின் சிரிப்போ! எங்ஙனம் உரைப்பேன்?
செங்கதிர்ச் செல்வா! செம்மைசேர் இறைவா!
ஓரறி வுயிர் முதல் ஆறறி உயிர்வரை
வரவுகண் டுவக்க வளம்பல புரிவோய்!
நோயுந் துன்பமும் மாயுமுன் வரவால்
சேயுடைத் தாயெனச் செவ்விய முகத்தாய்!
உலகார் பொருள்களை உவப்புடன் காட்ட
பலகை விரித்தனை பலகால் கொண்டனை
அளக்கலாப் பரப்பே அலகிலா ஒளியே
களங்கமில் மேலோய்! கதிரவ! வணக்கம்.
துளங்குறு வாய்மைச் சுடரே! வணக்கம்.
உன்னொளி இன்றேல் மண்ணுலகில்லை
கண்ணொளி தந்தெமைக் காக்கும்
விண்ணொளிர் அரசே! வேண்டுதும் வாழி!

இராகம் :- பூபாளம். தாளம் :- ஆதி.

முதனிலை.

கதிரவன் கிழக்கே தோன்றினன் விரைந்தே
காணுவிர் மாந்தர்களே. (கதி)

இடைநிலை

பதிமகிழ் பாவையர் வீதியில் நிறைந்தார்
பண்ணொலி வீணையிற் பாவொலி சிறந்தார் (கதி)

முடிவுநிலை

தாமரை தண்கயம் மலர்ந்தன காணீர்
ஏமுறப் பறவைகள் இசைத்தலும் கேளீர் (கதி)

அவரவர் கடமையை ஆற்றுவோம் வாரீர்
கவலைகள் பனியெனக் கரைந்திடும் தேறீர் (கதி)

[வீடுநோக்கிச் செல்லுகிறார் - வீட்டில்]

மனைவி : (தனியே)

கலைமகள் அருணலம் கடலெனப் பொங்கும்.
தலைவருக் கலைமகள் தாமரைச் செல்வியின்
அருளொரு சிறிதும் அமைவிலை ஏனோ?
உறுபசி யுடன்வரும் உத்தமர்க் குணவு
தரும்வகை சிறிதும் தையல்யான் அறியேன்
வறுமையே உனைப்போல் வளைகடல் உலகில்
தெறுபகை ஒன்றும் தேறிலன்—உன்னால்
விருந்துசெய் வேள்வியும் பொருந்துதல் ஒழிந்தேம்
இரந்தவர்க் கீயும் பெருந்தகை யிழந்தேம்
துறந்தவர்ப் போற்றும் தொல்வினை மறந்தேம்
கரந்தனம் இல்லில் உரந்தனை விட்டே
வட்டுடை உடைத்தேம் பட்டினி கிடந்தேம்
விட்டனை இலைநீ வெதுப்புகின் றாய்எமை
பயனிலாப் பாவியே நயனிலை உன்செயல்.

புலவர் : (வந்துகொண்டே)

பயனிலா ஒருபொருள் பாரினில் உண்டோ?

அதன்பயம் சிறிதும் ஆய்ந்திலே நங்காய்!
இதன்பயம் அறிந்தோர் இசைபட வாழ்ந்தார்
வறுமையைக் காட்டினும் வன்றுணை வேறிந்
நிலத்திடை யில்லை ....

மனைவி : நீர்மையிற் சிறந்தீர்!
புலத்தொடு நலமெலாம் பொய்படச் செய்திங்
கிழுக்குறு செயலெலாம் இயற்றிடத் தூண்டும்
அழுக்க மைந்தன்போ டாண்மையைப் போக்கும்
வாய்ச்சொல் பிறர்கொளா வகைபடச் செய்யும்
தாய்க்கும் வெறுப்பினைச் சமைக்கும் கைப்பொருள்
இல்லெனின் யாவரும் எள்ளுறச் செய்யும்
நெருப்பிடைத் துஞ்சலும் ஆகும் நிரப்பிடைக்
கண்பா டரிதெனப் பண்புடைப் புலவர்
இசைத்தனர் அன்றோ இங்ஙனம் தாங்கள் ...

புலவர் : இசைத்ததன் உண்மையை இன்புடன் கேள் நீ!
சுடச்சுட ரும்பொன் தூய்மையும் அற்றே
வறுமையிற் றேர்ந்தவர் வாழ்வினிற் றேர்வர்
அறிஞரும் உலகினை அளந்திட வறுமையை
காட்சி அளவையாய்க் கருதினர் கிளைஞரை
நீட்டி அளக்கும் கோலென வள்ளுவர்
காட்டினர், மேலும் நாட்டின் வறுமையை
செல்வர் அறியார் செம்மாந் திருப்பர்
பல்வகை உயிர்களின் பசிப்பிணிக் கொடுமையை
நிரப்புற் றவரே நீக்கினர் முன்னாள்
உரப்பிய வறுமைதான் உயர்தசிந் தனையை
உலகுக் களிக்கும் உண்மையைக் காட்டும்
கலப்பையை ஓட்டும் குலப்பகை வாட்டும்
பல்வகைப் புதுப்பொருள் பாரினுக் களிக்கும்
நல்வகைக் கருத்தினை நாடொறும் கொடுக்கும்
காரணம் ஆய்ந்துநற் கருவிகள் செய்யும்
பேரறி வாளரைப் பெற்றது வறுமைதான்
மங்கையர் மயக்கமும் பொங்கிடு சீற்றமும்
தங்குத லின்றித் தவிர்த்திடும் பொறையினை

அளித்துளம் விரிக்கும் அருளினைப் பெருக்கும்
களிப்பவர் சிறிதும் கடமைகள் புரியார்
உடைமையைக் காக்கவே உளந் தடுமாறி
மடமையை வளர்த்து மன்னுயிர் மடிப்பார்
நடைநயன் தேரார் நன்மையை நோக்கார்
படையினை மிகுத்துப் பாரினை அழிப்பர்
கற்றிலார் செல்வமோ கடுங்கூற் றொக்குமிப்
பெற்றியை உணர்ந்தே பெரியோர் வெறுத்தனர்.

மனைவி : கல்வியும் வாழ்வும் கனிவும் ஈகையும்
செல்வமி லாவிடிற் சேருமோ தலைவ!

புலவர் : உழைத்தால் அவையெலாம் உண்மையிற் சேரும்
பிழைத்தால் வருமோ பேதையே

மனைவி : .... ஆயின்
உடலுழைப் பின்றி உளத்தால் உழைக்கும்
நும்போல் அறிஞர்க் குதவியும் இலையோ?

புலவர் : கடலுல கெங்கணும் காவல் பூண்ட
காவலர் வள்ளல்கள் கருணைமிக் குடையோர்
யாவரும் உளரே நாவலர்ப் போற்ற.

மனைவி : அவ்வா றாயின் நந்துய ரகலப்
பொருளினைத் தேடுதல் பொருந்துமே நாதா

புலவர், ஆவிற்கு நீரென இரப்பதும் அழகிலை
நாவிற் கிழிவென நவின்றனர் அன்றோ?

மனைவி : நாட்டவர்க் குறுதி காட்டுநற் புலவர்கள்
நாட்டிற் கரணென நவின்றனர் அறிஞர்
அரணினைக் காத்தல் அரசர்தங் கடனும்
அன்றியும் மன்னவர்க் கவரே காப்பாம்
நன்றியை மறந்து நாவலர் தம்மை
இரவலர் என்பவர் ஏதும் அறியா
மாநிகர் மாக்கள் மாண்பினைத் தெரியார்

இன்னும் சொல்வேன் தன்னேர் வள்ளுவர்
கரப்பிலா நெஞ்சிற் கடனறி வார்முன்
இரப்பும் ஓரோர் உடைத்தென இசைத்தனர்

புலவர் : அத்தகை வள்ளல் யாருளர்? அன்றியும்
மெய்த்தகு கல்வியின் மேன்மை தெரிந்தார்
இத்தரை மீதினில் எங்குளர் இரக்க?

மனைவி : புரவலர் இல்லையோ பூதல மீதினில்
பாரியும் இல்லனோ? பறம்பும் ஒளிந்ததோ?
"சீரிய அறிஞன் தேன்படு சொல்லன்
பாவலர் எனும்பயிர் புரந்திடும் மழை"என
நாவலர் பலரும் நவின்றனர் அவனை
மேவிடின் வறுமை சாவினை அடையுமே.

புலவர் : அன்பே உன்னுளம் அவ்வா றுயின்
இன்புடன் செல்வேன் துன்பினை மாய்ப்பேன்
வருகிறேன் நங்காய் ... ...

மனைவி : (வணங்கி) இறைதுணை யாகுக.

(மூன்றும் காட்சி முடிவு.)

காட்சி 4.

(பாண்டியன் அவையில் வந்து அமருகிறான். புலவர்கள் அமைச்சர்கள் வாழ்த்துக் கூறுகிறார்கள்.)

நின்றேத்துவோன் :
முந்நீர் வளைந்த மண்டிணி ஞாலத்துச்
செந்நீர் விளைக்கும் செங்கோல் வேந்தன்

அவை : வாழ்க! வாழ்க! வளர்க நற்புகழ்!

அமைச்சர் : மதிவழிப் பிறந்த நிதிநிறை வேந்தன்

அவை : வாழ்க! வாழ்க! சூழ்கநல் வெற்றி!

பாண்டியன் : நேயமும் பண்பும் தூயநற் சிந்தையும்
ஆயநற் றிறலீர்! அமருக வணக்கம்
நங்குடி வாழுநர் நன்கனம் உளரோ?

அமை 1 : பொங்குறு மகிழ்வாற் பொலிவுறும் மக்கள்
வளம்பல நிறைந்து வாழ்விற் சிறந்தே
உளம்நிறை அன்பால் ஒளிசிறக் கின்றனர்
இறையும் புறவும் இன்பொடு தந்தே
குறையும் கறையும் தவிர்ந்தனர் மன்னவா.

பாண்டியன் : மன்னவர் திறைப் பொருள் மதிப்புடன் கொடுத்து நம்
சின்னம் பணிந்து செழிப்புட னுளரோ?

அமை : தென்னவர் ஏறே சிற்றர செல்லாம்
திறைப்பொருள் அளந்தனர் செம்மைசேர் பறம்பின்
வரைப்பகம் வாழும் வண்மைசேர் பாரி
ஒருவனைத் தவிர.........

பாண் : ஓ! அப்பாரியின்
திருவமை பறம்பும் செழுமை யற்றதோ?
பெருவளங் குறையப் பெயல் பிழைப்புற்றதோ?

அமை : புலங்கொளா வளமையும் பொலிவுசேர் நிலையும்
நிலங்கொளா மாரியும் நீங்கலாப் பறம்பது.

பாண் : அற்றேல் நம்பொருள் அனுப்புதற் காங்கே
மற்றோர் இடையூ றுண்டோ தடையோ?

அமை 2 : தடையுட னிடையூறில்லை வேந்தே
கொடைமகிழ் பாரி கொடுத்தல் இல்லை.

பாண் : இறும்பூ தாகுநீர் இயம்பிய சொற்கள்
கரும்பூ வேம்பின் தொடையலான் நாட்டுள்
திறைப் பொருள் தாராச் சிற்றர சுளதோ
பொலிசை இல்லாத் தனிசும் உண்டோ?

(முதலமைச்சரைப் பார்த்து)
அருமதி அமைச்சே! அரசிறை இதுவரை
சிறுமதிப் பாரி சேர்த்திட வில்லையாம்
அதன்றிறம் அறிதல் வேண்டுவல் அறைக.

அமை 1: மதனுடை நோன்றாள் மன்னவ! மதிப்புடைப்
பாரியோர் பைந்தமிழ்க் காவலன். மற்றும்
சீரிய நமக்கோர் செப்பருந் துணைவன்
வீரியம் மிகுந்தோன் நேரிய உளத்தன்
பணிவே அறியாத் திணிதோ ளரசன்
குணில்பாய் முரசக் கொற்றவர் வியக்க
ஈகையும் மணியும் இயல்தேர் பரிமா
அறமென் றுன்னு தருளுடன் அளிப்போன்
குறுநில மன்னர் குடியோ னுயினும்
பெருநில வேந்தரிற் பிறங்குஞ் சீரோன்

பாண்: (சினந்து) சானும் புகழ்ச்சி சந்திர குலத்தவர்
வேலின் வலிமை வேலை யறியும்
கொடையின் பெருமை குவலயம் அறியும்
படையின் பெருமை பார்த்திபர் அறிவர்.

அமை 1; வெகுளல் அரசே! மேதை போற்றுக
தகுதியை அறிந்தும் தனிப்பெருந் தந்தை
பறம்பினிற் பகுதியை விரும்பினர் இல்லை
அறந்தலை நோக்கி அரசிறை விட்டனர்
சுதந்திர நாடாய்த் துலங்கிட ஒப்பினர்.

பாண்: பதந்தொறும் என்னுளம் பதைபதைக் கின்றது
சிற்றர சோங்கச் செழியர் துணையாம்
முற்றுமுன் முள்ளினைக் களைதலே மதியாம்
செழியரின் ஆண்மை பழியொடு வாழுமோ?

அமை 1: வழிவழி ஒருநெறி வழங்கலும் முறையோ?
தந்தையார் செல்வழித்தனயரும் சேறல்
முந்தையோர் கண்ட முறையுடன் அறமாம்.

[தொடரும்]